திசை
THISAI

**New Science Academy**
IN FRONT OF B. M. C. — JAFFNA
**90 A/L DAY CLASS**
PHYSICS — மணியம்
CHEMISTRY — சண்
BOTANY — குணசீலன்
ZOOLOGY — தங்கராஜா
PURE / APP } MATHS — பிரேம்நாத்
ஆரம்பம் : 1. 1. 1990

திசை 1 | 15-12-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 49

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் — கருணாநிதியின் புதிய திட்டம்?

**இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இருந்து முற்றாக அமைதிப்படை வெளியேறிய பின், அப்பிரதேசங்களில் சுமுகமான ஆட்சி தோன்ற வேண்டும் என்றும், அந்த ஆட்சி அப்பகுதிவாழ் தமிழ்பேசும் இனத்துக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதாக அமைய வேண்டும் என்பதுவுமே புதிதாகப் பதவிக்கு வந்துள்ள வி.பி. சிங் தலைமையிலான இந்திய அரசின் நிலைப்பாடாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த வாரம் புதுடில்லி சென்ற இலங்கை பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜேரத்தின, அமைதிப்படை டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் இலங்கையிலிருந்து விலகிக் கொள்வது தொடர்பாகவும், இப்பகுதிகளில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்த் தேசிய ராணுவம், ஆகியவை பற்றியும் இந்தியப் பிரதமர் வி பி சிங், இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் ஆகியோரோடு பேச்சுவார்த்தை நடத்திய போதும்; தீர்வொன்றும் இல்லாமலே திரும்பினார் என்பது தெரிந்ததே. ஆனால் இந்திய அரசு பழைய ராஜீவின் அரசு கூறியது போலவே, தமிழ் மக்கள் பாதுகாப்பைப் பேணிய பின்னரே இந்தியப் படை விலகும் என்பதை மட்டும் பொதுவாக அழுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழக முதல்வர் கருணாநிதி, இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கையும் வெளியுறவு அமைச்சர் குஜ்ராலையும் சந்தித்ததன் பின்னர், ஈழத் தமிழர் பிரச்சினைக்கு கருணாநிதி ஒரு புதிய திட்டம் ஒன்று வகுத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளதோடு இதை இந்தியப் பிரதமரும் ஆதரித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. ஆனால் இத்திட்டத்தை கருணாநிதி வெளிப்படையாகக் கூறாததினால் இது பற்றி பல ஊகங்களே வெளிவந்துள்ளன.

விடுதலைப் புலிகளும் தாம் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு தயார் என்ற நிலைப்பாட்டை புதிய அரசியல் கட்சியை அமைத்துள்ளதன் மூலம் வெளிக் காட்டியுள்ளதாலும், இத்தகைய ஜனநாயக வழிமுறையையே அவர்களிடமிருந்து ஈ. பி. ஆர். எல். எவ். எதிர்பார்த்திருப்பதாலும், தற்போதுள்ள மாகாண அரசு கலைக்கப்பட்டு புதிய தேர்தல் இங்கு நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இதைச் சுமுகமாக நிறைவேற்றுவது சம்பந்தமாகவும் இவற்றோடு சம்பந்தப்பட்ட தமிழ்த் தேசிய ராணுவம் இந்நிலையில் எவ்வாறு இயங்க வேண்டும் என்பது பற்றியுமே பிரச்சினைகள் இருந்து கொண்டிருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

## காதல் செய்வீர் உலகத்தீரே!

"இன்று இலங்கையில் இளைஞர்களும் யுவதிகளும் சுதந்திரமாகத் தமது காதல் துணையோடு காதல் இன்பத்தை அனுபவிப்பதற்கு, பிரத்தியேக பூங்காக்கள் திறந்துவிடப்படவேண்டும்." இவ்வாறு தீவிர புரட்சியாளரான வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றத்தில பேசியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

"இன்று இளைஞர்களும் யுவதிகளும் சுதந்திரமாகத் தமது காதலை அனுபவிப்பதற்கு வாய்ப்பின்மை, பெருந்தடையாக உள்ளது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு கூறிய இவரே. அண்மையில் தமக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியத்திலிருந்து 2 லட்சம் ரூபாவை, பல்கலைக்கழக மாணவரின் இடவசதிக்காகக் கொடுத்துதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக் கடன்

வட-கிழக்கில் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 11,000 இளைஞர்களுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கான கடன் வசதிகளை வழங்கும் பொருட்டு ரூபா 5 கோடி 60 லட்சத்தை சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் வழங்கியுள்ளது.

ரூபா 1000 தொடக்கம் 5000 வரை வழங்கப்படவிருக்கும் இக் கடனைப் பெற விரும்புவோர் தனித்தோ, கூட்டாகவோ தாம் ஆரம்பிக்கவிருக்கும் தொழில்பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகத் தாம் வதியும் பிரதேசத்திலுள்ள மாவட்ட ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## மட்டக்களப்பு மோதல்

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடந்த மோதலில் 124 பேர் கொல்லப்பட்டதாக, பி. பி. சி. உறுதியளிக்கப்படாத செய்தி என்ற ரீதியில் கூறியுள்ளது.

மேலும் இந்த மோதலின் விளைவாக வீதியெங்கும் சடலங்கள் காணப்படுவதாகவும் வீதிகள் வெறிச்சோடிக்கிடப்பதாகவும், மூன்று முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

## கடத்தல்

மட்டக்களப்பு மாவட்ட எம். பியான சாம் தம்பிமுத்துவின் மனைவியும், மகனும் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

## கப்பம் கேட்ட பொலிஸ் அதிகாரிகள்

கடந்த திங்கட்கிழமை பிலியந்தலையில் தீவிரவாத ஒழிப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகள் இருவர் பிரபல வர்த்தகர் ஒருவரிடம் 5 லட்சம் ரூபா கப்பம் கேட்டு மிரட்டியபோது, அங்கு வந்த விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக, பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆயுதக் குழுக்களை ராணுவத்திற் சேர்க்க முயற்சி

இலங்கையின் வட - கிழக்கில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நடைபெற்று வரும் ஆயுதக் குழுக்களின் மோதல்களை, சுமுகமான ஒரு முடிவுக்கு கொண்டுவரும் உத்தேசம் ஒன்றை இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வட - கிழக்கில் இன்று நிலைபெற்றுள்ள சகல ஆயுத அரசியல் குழுத் தலைமைகளை, இலங்கை அரசாங்கம் பேச்சுக்கு அழைத்துள்ளது. இப் பேச்சுவார்த்தையில் இடம் பெற இருக்கும் முக்கிய அம்சம், சகல ஆயுதக் குழுக்களிடமும் உள்ள பயிற்சி பெற்ற உறுப்பினர்களை இலங்கை அரசின் ராணுவத்தில் சேருமாறு கேட்பதே. இதனால் தற்போது உதிரி உதிரியாக ஆயுதங்களோடு திரியும் குழுக்களையும், அதனால் நிகழும் மோதல்களையும் தவிர்க்கலாம் என இலங்கை அரசு நம்புவதாக, இதுபற்றி பத்திரிகைகளுக்கு அறிவித்த தளபதி சிறில் றணதுங்க கூறியுள்ளார்.

## இந்திய வெளியுறவுக் கொள்கை— சோவியத் வரவேற்பு

இந்தியாவின் புதிய அரசு வெளியிட்டுள்ள புதிய வெளியுறவுக் கொள்கையை சோவியத் யூனியன் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளது. குறிப்பாக, சிறிய நாடுகளுடனான அதன் உறவு நிலையை சீர் செய்து கொள்வதுபற்றிய அதன் அறிவிப்பை சோவியத் வெளியுறவு அதிகாரி பாராட்டியுள்ளார்.

ஏற்கனவே ராஜீவ் அரசு சிறிய நாடுகளுடன் கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கை சம்பந்தமாக சோவியத் வெளியுறவுக் கொள்கை ஆய்வாளர் அதிருப்தி தெரிவித்திருந்ததும் அதற்கேற்ப சோவியத் அரசும் சூசகமாகத் தனது அதிருப்தியை வெளிபிட்டிருந்ததும் 'திசை' வாசகர்கள் அறிந்ததே.

## இனிமேல் தமிழர்களுக்கு பாரபட்சம் இல்லை — ரஞ்சன்

"இந்தியப்படை டிசம்பர் 31க்குள் இலங்கையிலிருந்து வெளியேறும். இலங்கை - இந்திய உறவுகள் மேலும் அபிவிருத்தியடையும்"

அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

"வரும் ஏப்ரிலில் சார்க் மாநாடு கொழும்பில் நடைபெறும்போது ஒரு இந்தியப் படை வீரரும் இலங்கையில் இருக்கக் கூடாது

இலங்கை இனிமேல் தமிழர்களுக்கு ஒரு பாரபட்சத்தையும் செய்யாது".

பத்திரிகைத் தாள் தட்டுப்பாட்டின் காரணமாக இந்த இதழ் 8 பக்கங்களில் வெளிவருகின்றது. நிலைமை சீரானதும் வழமையான பக்கங்களுடன் வெளிவரும்

— ஆர்.

# கிழக்கு மாகாண இனப் பரம்பல்

இழக்கு மாகாணத்தின் பல் இன அமைப்பினைப்பற்றி இக்காலகட்டத்தில் அறிதல் அவசியம். இம்மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை என்று மூன்று மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் திருமலை, அம்பாறை என்பனவே அதிகம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் பாதிக்சப்பட்டன. இன்றைய பிரச்சினைகட்கு இதுவும் ஓர் முக்கிய காரணமாகவும் அமைந்துள்ளது.

1981இன் குடிசன மதிப்பின் படி கிழக்குமாகாண மொத்தச் சனத்தொகை 9,76,475 ஆட்களாகும். இதில் தமிழ்மக்கள் 43.20% ஆகவும், முஸ்லிம்கள் 31.49% ஆகவும், சிங்களவர்கள் 24.82% ஆகவும் உள்ளனர். எனவே கிழக்கின் தமிழ் பேசும் மக்களின் வீதாசாரம் 74 69% ஆகும்.

முதலில் திருமலை மாவட்டத்தை நோக்கின், மூவினங்களும் அதிகளவு தொகையில் வேறுபாடின்றி வாழ்வதனைக் காணலாம். இம்மாவட்ட மொத்த சனத்தொகை 256,790 பேர் இதில் தமிழ் மக்கள் 36.41% ஆகவும். சிங்களவர்கள் 33.62% ஆகவும், முஸ்லிமகள் 28.97% ஆகவும் வதிகின்றனர். சேருவில, கந்தளாய், மொறவேவ, கோமரன்கடவல ஆகிய பிரிவுகளில் சிங்களவர்கள் அதிகம் வாழ்கின்றனர். இன்று மேற்படி இன விகிதம் ஓரளவாவது மாற்றத்துக்குள்ளாகி இருக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தக்குடித்தொகை 3,30,899 ஆக இருந்தது. இங்கு தமிழ் மக்கள் 72.71% ஆகவும், முஸ்லிம்கள் 23.97% ஆகவும், சிங்களவர்கள் 3 21% ஆகவும் வதிந்தனர். ஆனால் இன்று வடமுனை, கல்குடாப் பகுதிகளில் வதிந்து வந்த சங்களவர்கள் வெளியேறியமையினால் முழு அளவாகத் தமிழ் பேசும் மக்கள் தான் வாழ்ந்து வருகின்றனர் எனலாம்.

அடுத்து, அம்பாறை மாவட்டத்தை நோக்கினால் மொத்தக் குடித் தொகை 388,786 பேர். இதில் முதலாவதாக முஸ்லிம்கள் 41.53% ஆகவும், அடுத்துச் சிங்களவர்கள் 37.64% ஆகவும், தமிழ்மக்கள் 20.50% ஆகவும் உள்ளனர். இங்கு தமிழ் பேசும் மக்களின் தொகுதிகளாக 3 தொகுதிகளும், ஒரு சிங்களத் தேர்தல் தொகுதியும் உள்ளது.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் சிங்களப் பிரதிநிதிகளே இம்மாவட்டத்தில் இருந்து அதிகம்தெரிவாகினர். இதற்குக் காரணம் விகிதசாரத் தேர்தல் முறைதான் எனலாம். இவ்வாறாக, குறைந்த வீதாசாரத்தில் உள்ள அம்பாறைச் சிங்களவர்கள், அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது மட்டுமன்றி, அம்பாறைத் தேர்தல் தொகுதியானது, மாவட்டத்தின் அரைப்பங்கிலும் அதிகமான நிலப்பரப்பையும் கொண்டுள்ளது. அதாவது, 37% ஆக உள்ள சிங்களவர்கட்கு நிலப்பரப்பில் 50% இலும் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. 63% மான தமிழ் பேசும் மக்களுக்கு மாவட்டத்தின் அரைவாசி நிலப்பரப்புக் கூட இல்லை. மேலும், இம்மாவட்டத்தில் சிங்கள மக்கள் வாழும் பகுதியே அதிகமான செழிப்பான பகுதியாகும். அளவு ரீதியாகக் கூறின் 4,539 சதுர கிலோமீற்றர் பரப்பளவான அம்பாறை மாவட்டத்தில், அம்பாறைச்சிங்களத் தேர்தல் தொகுதியின் பரப்பளவு மட்டும் 2,304 சதுரகிலோமீற்றராகும். இதே நிலைமை தான் திருமலையிலும் காணப்படுகிறது. இங்கு சேருவாவில எனும் சிங்கள தேர்தல் தொகுதி பெரும் பரப்பளவை உள்ளடக்கியது.

இவ் அம்பாறை மாவட்டத்தில் தான் இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அத்துடன் ஓரளவு நிலப்பரப்பையும் கொண்டுள்ளனர். ஆனால் திகவாபி போன்ற திட்டங்களால் அவர்கள் தற்போதும் பாதிக்கப்படுகின்றனர். சுருங்கக் கூறின், கிழக்கில் சிங்களவர்களது திட்டமிட்ட குடியேற்றமானது சிங்களவர்களது எண்ணிக்கையால் ஏற்படும் பிரச்சினை என்றவாறன்றி, அவர்கள் கபளீகரம் செய்த நிலப்பரப்புகளால், அதாவது நிலத்தின் அளவுகளால் ஏற்படும் ஓர் பிரச்சினையாக நோக்கப்படுகின்றது. கிழக்கின் சிங்களப் பிரதேசங்கள் மூன்று, நான்கு தசாப்தங்களாகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்டனவாகும்.

**க. மனோகரன்**

நாம் தற்போதுள்ள நிலைமையில் வடக்குக் கிழக்கு மாகாண மொத்தச் சனத்தொகையைக் கவனத்தில் கொண்டால், அது 20 87, 43 ஆகும். இதில் தமிழர்கள் 68.82% ஆகவும், முஸ்லிம்கள் 17.61% ஆகவும், சிங்களவர் 13.24% ஆகவும் உள்ளனர். இதனால் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் 86.43% ஆக அது காணப்படுகின்றது. இதனாலேயே வடக்கு – கிழக்கு என்ற இணைந்த அமைப்பு எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது.

தனியே கிழக்கு மாகாணம் என்று பிரிந்தால் தமிழ் மக்களது பெரும்பான்மை குன்றிவிடும். அத்துடன் எந்த இனமும் அம்மாகாணத்தின் அரைவாசிப்பங்கையாவது கொண்டிராததால், அங்கு எப்போதும் ஸ்திரத்தன்மையை அரசியல்நோக்கில்எதிர்பார்க்க முடியாது. முன்பு வலியுறுத்தப்பட்டது போல அம்பாறை மாவட்டத்தை அல்லது தேர்தல் தொகுதியை, கிழக்கு மாகாணத்தில் இருந்து விலக்குவது என்னும் கருத்து இன்று குறிப்பிடத்தக்களவுக்கு வலியுறுத்தப் படுவதில்லை.

கிழக்கு மாகாணம் முழு இலங்கையின் பரப்பளவில் 13.52%மான பரப்பளவைக் கொண்டது; வட – கிழக்கு மாநிலம் என நோக்குகையில் முழு இலங்கையின் 26.37% மான அளவைக் கொண்டதாகும். எனவே, தமிழ் மாநிலம் என்பது தீவின் நான்கில் ஒரு பங்காக அமையும். □


திசை THISAI

சந்தா விபரங்கள்

(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 800/- (இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.



## நுளம்புத் தொல்லையா?

நுளம்பை விரட்டி ஏனைய பூச்சிகளையும் விலக்கிட இயற்கை எமக்களித்த வேம்பின் துணை கொண்டு தயாரித்த "நீம் சுகாதார தூபம்" விக்கினமில்லாதது, அடக்கமான பைக்கற்றில், விலை ரூபா 1/- மட்டுமே! மற்றுமோர் "மில்க்வைற்" சாதனை.

**மில்க்வைற்,**
யாழ்ப்பாணம்.

## பூரணி பெண்கள் நிலையம்

மேற்படி நிலையத்திற்கு பெண் பொறுப்பாளர் தேவை. இவர் நிலையத்திலேயே வசித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்தவராகவும், சினேக மனப்பான்மையுடையவராகவும், நெருக்கடியான சந்தர்ப்பங்களிற் துணிந்து முடிவு எடுக்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும். பெண்கள் அமைப்புகளுடனான வேலை அனுபவம் மேலதிக தகைமையாகும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். விண்ணப்ப முடிவு 30. 12. 89

பூரணி பெண்கள் நிலையம்,
உடுவில்,
சுன்னாகம்.

## TOEFL CLASSES

Those who wish to follow TOEFL classes are requested to register their names at this Institute on or before 25-12-89. Classes will be conducted during week - ends since Saturday, 20th January, 1990, by Dr. Porter.

— Director —
Evelyn Rutnam Institute,
University Lane,
Thirunelveli, Jaffna.

## பழைய புத்தகங்கள்

பேப்பர்கள் தேவை
இருப்பவர்கள் தொடர்பு கொள்ள
அண்ணா தொழிற்சாலை,
இணுவில்.
**Anna Factory,**
INUVIL

## FOR SALE

RECONDITIONED
HONDA CHALY
16, 3rd Cross Street
JAFFNA.

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் பெரிய கடைக்கு சமீபமாகவுள்ள வீடொன்றில் அறையொன்றும் குசினியும் ஒரு ஹோலுடன் வாடைகைக்குக் கொடுக்கப்படும். அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. குடும்ப அங்கத்தவர்கள் ஐந்து பேருக்கு மேற்படாதிருத்தல் நன்று அத்துடன்முழுப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். விபரங்கட்கு; 112, C/O 'திசை' த. பெ. எண் :- 122 என்ற முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். (Ad 112)




## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை

**கணக்காளர் பதவி வெற்றிடம்**

மேற்காண் பதவி வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு, தகமையுடைய யாழ். மாவட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும் முகவரிக்கு 20. 12. 89 ந்திகதி நண்பகல் 12. 00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பவேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : (104. 10 கூ.வே. ஆணைக் குழு சு. நி. இல. 165/ 88- 104. 8 (102/ 80)

1005 — 1705
40 × 5 -- 50 × 10

விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூ. 5/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். தேவையான தகமைகளையும், மேலதிக விபரங்களையும் சங்கத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம்.

11. 12. 89.
ஊர்காவற்றுறை

பொது முகாமையாளர்.

# தென்னுபிரிக்காவில் வெள்ளையரின் இருள் ஆட்சி நீங்குமா?

கறுப்பின மக்களுக்கெதிரான இன ஒதுக்கலையே முதலீடாகக்கொண்டு, மொத்தவியாபார அரசியல் நடத்தும் தென்னுபிரிக்க வெள்ளையர் ஆடசியின் எதிர்காலம் என்ன நிலையில் இருக்கப் போகிறது? இது தொடர்ந்தும் இறுக்கம் கொள்ளுமா? அல்லது அதில் தளர்வு ஏற்பட்டு புதிய சகாப்தம் உதயமாகுமா? சிறுபான்மையினரான வெள்ளையர் இங்குநடாத்தும் இருள் ஆட்சிக்குச் சாவு மணியடிக்கும் காலம் நெருங்கி விட்டதா?

சிவா

இக் கேள்விகள் சம்பந்தமாகச் சிந்திக்கும் அரசியல் அவதானிகளின் கருத்தில் அதிக வித்தியாசங்கள் இல்லை. சிற்சில உள் விஷயங்களில் அவர்கள் சிறு வித்தியாசங்களைப் பேணினுலும், எல்லோரும் தென்னுபிரிக்க வெள்ளையரின் இனஒதுக்கல் ஆட்சி முறைக்கு அழிவு நெருங்கி விட்டது என்பதில் ஒற்றுமைப்பட்டே நிற்கின்றனர்.

கடந்த நொவம்பர் மாதம் 6 ஆம் திகதி அங்கு நடந்த பொதுத்தேர்தலில் 41 வருடங்களாக இன ஒதுக்கலையே தன் தொழிலாகக் கொண்டிருந்த தேசியக் கட்சி வழமையாக அதற்குக் கிடைக்கும் ஏகபோக வெற்றியை இழந்து, சுமாரான நிலையிலேயே ஆட்சிக்கு வந்துள்ளது. 166 ஆசனங்களில் 91 ஆசனங்களையே அது கைப்பற்றி உள்ளது. அதற்கு இன்னும் கிடைத்திருக்க வேண்டிய 25 ஆசனங்களில் 13 ஐ பழமை பேண் கட்சிக்கும் (Conservative Party), 12 ஐ ஜனநாயகக் கட்சிக்கும் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இங்கு முக்கியமாக இன்னென்றும் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படவேண்டியுள்ளது. அதாவது, தீவிர இன ஒதுக்கல் வாதக் கும்பலான 'பழமை பேண் கட்சிக்'காரர்கள், இத் தேர்தலில் தமது பலத்தை முன்னையவிட இரு மடங்காக்கியுள்ளனர் என்பதே அது. இந்தப் பழமை பேண் கட்சிக்கு இம்முறை கிடைத்துள்ள இரட்டித்த பலம், இன ஒதுக்கலுக்குச் சாவுமணி அடிக்கும் காலம் வந்துவிட்டது என்பதை எப்படி நிரூபிப்பதாகும்?

இதற்குப் பதில், நாம் இன்று தென்னுபிரிக்காவில், நிலவும் முழு அளவிலான அரசியல் நிலையைப் பார்க்க வேண்டும். ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த அரசியல் நிலையல்ல இன்று தென்னுபிரிக்காவில் இருப்பது. இன ஒதுக்கலுக்கெதிரான அழுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் இன்று தென்னுபிரிக்காவிற்கு உள்ளும் வெளியும், மிகத் தீவிரம் பெற்றுள்ளன. பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகள் ஆகியவற்றின் அச்சுறுத்தல்கள் அதை ஆட்டங்காணச் செய்துள்ளன. தென்னுபிரிக்கக் கறுப்பர்களின் பேரியக்கமான ஆபிரிக்க தேசிய



கொங்கிரஸ் இன்று அசைக்க முடியாத சக்தியாக நிலைத்து விட்டது. 25 வருடங்களாக சிறையிலிருக்கும் அதன் தலைவர் 'கறுப்பு மலர்' நெல்சன் மண்டேலா இன்று சிறைப்படுத்த முடியாத செல்வாக்கின் ஆற்றல் தனியானது. ஆபிரிக்க தேசிய கொங்கிரசும், ஏனைய அதன் கறுப்பின வெள்ளை இன ஜனநாயக நேச சக்திகளின் ஒன்று திரண்ட போர்க்குரல்களும், கறுப்பினத் தடைச் சட்டங்களை இன்று செல்லாக்காசாக்கி விட்டன. தடை செய்யப்பட்ட இயக்கங்கள், அதன் கொடிகள், சுலோகங்கள் எல்லாம் இன்று பகிரங்கமாக உயர்த்தப்படவும் கோஷிக்கப்படவும் தொடங்கியுள்ளன. அண்மையில் பிரகடனப் படுத்தப்பட்ட அவசரகால நிலைமையால் கூட, இன ஒதுக்கலுக்கெதிரான இயக்கங்களைத் துடைத்தெறிய முடியாமல் போய்விட்டதென்ருல், நிலைமையின் தீவிரத்தைஅறியலாம்.

இப் பின்னணியில் தான், கடந்த தேர்தலில் இன ஒதுக்கலின் தீவிர ஆதரவாளர்களான பழமைபேண் கட்சிக்காரர்கள் தமது வலுவை இரு மடங்காக்கியுள்ள தன் காரணத்தை, அறிய வேண்டும்.

இன்று தென்னுபிரிக்காவெங்கும் புத்துயிர் பெற்றுள்ள கறுப்பின மக்களினதும், வெள்ளையின ஜனநாயக முற்போக்குச் சக்திகளதும் இன ஒதுக்கலுக்கெதிரான போராட்டம், ஆபிரிக்க சிறுபான்மை பழமை பேண் வெள்ளையரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் பயப்படுவது, இன ஒதுக்கலுக்கெதிரான பரவலான இவ்வெழுச்சி, தாம் இதுகாலவரை வெள்ளையர் என்ற ரீதியில் அனுபவித்துவந்த தனி உரிமைகளை எல்லாம் பறித்துக் கொண்டு போய்விடுமோ என்பதே. இந்த அச்சமானது இவர்களையெல்லாம் ஓர் அணியின் கீழ் திரளச் செய்துள்ளது. அதாவது, வெள்ளையர்களின் ஆளுங் கட்சியான தேசியக் கட்சிக்குள் இருந்த பழமை பேண் வாதிகளின் ஆதரவும் இம்முறை பழமை பேண் கட்சிக்குச் சென்றுள்ளதன் விளைவே, இவர்கள் தமது பலத்தை இரட்டிப்பாக்குவதற்குக் காரணமாய் இருந்துள்ளது. இந்த அதிகரிப்பு ஆபத்தின் அறிகுறியல்ல. அணையப்போகும்பிற்போக்கு கொள்கையாளரான இனவாதிகளின் இறுதி நேர வெளிச்சமே எனலாம்.

இதுகாலவரை தேசியக் கட்சியிலிருந்து தெரிவாகிய (பழைய) ஜனுதிபதி பீற்றர் வில்லெம் போத்தா இப்போ ஆட்சியிலிருந்து ராஜினுமாச் செய்துவிட்டார் புதிய ஜனுதிபதியாக ஆட்சிக் கட்டிலில் ஏறியுள்ள டி கிளார்க் என்பவர், இனஒதுக்கல் கொள்கையில் முன்னையவருக்குச் சளைத்தவர் அல்லர். ஆனுல் எவர் வந்தாலும் அஸ்தமனமாகத் தொடங்கியிருக்கும் இன ஒதுக்கலை முறையாய் தக்க வைக்கப் போவதில்லை.

உலகெங்கும் இவர்களுக்கு எதிர்ப்பு. அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருந்த கிளார்க், அங்குள்ள ஜனநாயக கொங்கிரஸ் நாடாளுமன்றத்தினரால் காட்டப்பட்ட பலத்தஎதிர்ப்பின் நிமித்தம், தனது விஜயத்தை ரத்து செய்ய வேண்டிய நிலைக்குள்ளானுர். இந்நிலை இன்றைய கொர்பச்சேவ் அலையால் இன்னும் தீவிரம் அடைந்து, இன ஒதுக்கலுக்கு விரைவில் சாவு மணி அடிக்கும் என்பதே அரசியலறிஞரின் கருத்தாகும். □

# ஜே. ஆர். ஜே. வி. பியை ஏன் தடைசெய்தார்?

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக்கு வந்ததும் எந்தவித நிபந்தனையுமின்றி ஜே.வி.பி யினரை விடுதலை செய்தார். ஆனுல் 1983 இனக் கலவரத்துடன் மீண்டும் ஜே.வி.பி உட்பட ஏனைய இரண்டு இடதுசாரிக் கட்சியினரையும் தடைசெய்தார். அவ்வாறு செய்வதன் மூலம் இனக்வலவரத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பவராகவும், தான் ஒரு உண்மையான, நீதி விசுவாசி எனவும் ஜே. ஆர் தப்பட்டமடித்துக் கொண்டார். அவரால் தடை செய்யப்பட்ட எந்தக் கட்சியும் இனக்கலவரத்தில் அங்கம் பெறவில்லை என்பதுண்மை. ஏனெனில், அண்மைக் காலம் வரை தமிழர்களுக்கு எதிராக எதுவித இனரீதியான வன்முறையிலும் ஜே வி.பி ஈடுபடவில்லை. அவ்வாருனுல் ஜே. ஆர். இரண்டு இடதுசாரிக் கட்சிகளின் தடையை (சில மாதத்தில்) நீக்கிவிட்டு ஜே. வி பி. யின் தடையை மட்டும் ஏன் தொடர்ந்து நீடித்திருந்தார்?

ரி. ஜி. எல்.

1978 ஆம் ஆண்டு எஸ். எல். எவ். பி. க்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதற்காகவும், எஸ்.எல். எவ். பி. யின் வாக்கைப் பிரிக்க வேண்டும் என்பதற்காகவுமே ஜே.வி.பி.யை, ஜே. ஆர் திறந்து விட்டார். 1982 ஆம் ஆண்டு ஜனுதிபதி தேர்தலில் எஸ்.எல். எவ்.பி தோற்கடிக்கப்பட்ட பின்பு, ஜே. ஆரின் நோக்கம் நிறைவேறியது. அதேவேளை ஜே. ஆர்., எஸ்.எல். எவ்.பியை சீரழித்துவிட ஜே.வி.பியை மட்டும் ஆயுதமாகப் பயன்படுத்தவில்லை. எஸ். எல். எவ். பியின் தலைவரின் குடியுரிமை பறிக்கப்பட்டமையும், ஏனைய நடவடிக்கைகளும் எஸ். எல். எவ். பி. யின் தலைமைத்துவத்தைச் சின்னுபின்னப்படுத்தின. இவ்வாருன சூழ்நிலையில் எஸ். எவ். பி தொண்டர்களிடம் சுாணப்பட்ட அச்சம் – அதனுல் ஏற்பட்ட விரக்தியின் மத்தியில் எஸ்.எல்.எவ்.பி க்கு பிரதியீடாக களத்தில் நின்ற ஜே.வி.பி பக்கம் சாரக்கூடிய நிலைமை தென்பட்டது. எனவே வெளியரங்கில் ஜே வி. பி. இருப்பதனுல், எஸ். எல். எவ். பி. க்கு மாற்றுக் கட்சியாக வளரக்கூடிய தன்மை காணப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் ஈராக்கின் பெரும்பண உதவி ஜே. வி. பி க்கு கிட்டியதும், அதன் மூலம் ஜே வி. பி யின் உள்ளூர் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுக்கப்பட்டதும் (100 க்கு மேற்பட்டவை எனத் தெரியவருகிறது). இதனுல் ஜே.வி.பி தொண்டர்கள் மத்தியில் அமைப்பின் வேலை தொடர்பாக ஒரு வசீகரத் தன்மையேற்பட்டது. அத்துடன் 1982 ஆம் ஆண்டு மே தினத்தை, எந்தக் கட்சியினருடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு கவர்ச்சிகரமாக ஜே. வி. பி. யினர் கொண்டாடினர். மேலும் வடக்கில் புலிகளை அடக்க கிழட்டுச் சிங்கங்களால் முடியாது, இளம் சிங்கங்களால்தான் முடியும் என ஜே.வி.பி யினர் கூறினர். இவ்வாருன நிலைமையில் மார்க்ஸிஸ இடதுசாரிகள் என தம்மை அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பி யினர் எஸ்.எல். எவ்.பியை அழித்து ஜே. வி.பி. யாக மாற்றும் சூழ்நிலையை ஏற்படுத்தினர். இதனை ஜே. ஆரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதனுல் ஒருபுறம் எஸ். எல், எவ் பியைச் சீர்குலைக்க விரும்பிய ஜே. ஆர் அதேநேரம் மூன்ருவது சக்தியொன்று வளர்வதையும் விரும்பவில்லை. அதில் எப்போதும் அவர் மிகவும் அக்கறையாக இருந்தார்.

மொத்தத்தில் எஸ்.எல்.எவ் பியை அழிக்க ஜே.வி.பியை அவிழ்த்துவிட்டார்; அந்தச் சீர்குலைவில் ஜே.வி.பி கொழுக்கக் கூடாது என்பதற்காக அதன் மீதும் கத்திவைக்கவும் ஜே. ஆர். தவறவில்லை. ஆகவே தான், 1983 இனக்கலவரத்தைச் சாட்டாகவைத்து ஜே. ஆர். ஜே.வி பி யைத் தடை செய்தார். □

# மனிதனின் மதம்

கொழும்பு ஐந்துலாம்படிச் சந்தியிலுள்ள வட்டவளைவில் (Round About) உள்ள மேடையில், ஒரு கண்ணுடிப் பெட்டியால் கோயிலமைத்து, அதற்குள் யேசுநாதர் சிலை ஒன்றை வைத்து அப்பகுதி வாழ். கிறிஸ்தவர்கள் தமது இருப்பையும் பக்தியையும் வெளிக்காட்டினுர்கள். அப்பகுதி சிங்களப் பௌத்தர்களுக்கு இது கண்ணுக்குள் குத்தவே, பதிலுக்கு அங்கு புத்தர் சிலையை நிறுவி அவ்விடத்தில் ஒரு பெரிய கோயிலையே கட்டினர். அப்பகுதியிலுள்ள கடைக்காரர்களிடம் பண உதவி பெற்றே இக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இதைப் பார்த்து இந்துக்களும் முஸ்லிம்களும் தமக்குள் பலவாறு குசுகுசுக்கத் தொடங்கினர் ஆனுல் இவ்வேளையில் என்ன காரணத்தாலோ, யேசுநாதர் சிலையையும் புத்தர் சிலையையும் நிறுவியவர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு அதுபெரும் கைகலப்பில் முடிந்தது.

இதன் விளைவு, புறக்கோட்டைப் பொலிசாரின் உத்தரவுப்படி அடுத்தவினுடியே அந்த வட்ட வளைவு மேடையில் ஏற்றப்பட்டிருந்த யேசுநாதர் சிலை புத்தர் சிலை இரண்டும் அகற்றப்பட்டன. இச் செய்கை, வேறு மதத்தவர்களின் ஆதிக்கமோ, மனநோதலோ ஏற்படாமல் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்தச் சிலை நிறுவல் போட்டி ஏன் அங்கு ஏற்பட்டது?

உண்மையில் ஜனசந்தடிமிக்கதும் வாகன நெரிசலுக்கு பேர்பெற்றதுமான அந்த வட்ட வளைவு இறைவனைக் கொலுவிருத்துவதற்குரிய தூய்மையான இடமோ அமைதியைத் தரத்தக்க இடமோ அல்ல.

ஆனுல் மனிதன் இவற்றை யா நினைக்கிருன்? அவனிடம் உள்ள பலவித ஆதிக்க வெறிகளுக்கு மதமும் ஒரு கருவியாகப பயன் படுத்தப்படுகிறது, என்பதே உண்மை.

— யாழ் குருவி □

## கலைச்சாரல்

# வீரசுதந்திரம் வேண்டி நின்ற மகாகவி பாரதி

த. இந்து

**மகாகவி பாரதியாரின் பிறந்த தினம் டிசம்பர் 11 ஆகும் அதையொட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.**

பாரத நாட்டின் விடுதலைப் போரில், சுதந்திர தாகம் கொண்ட பாரதியார் பாடிய இக் கவிதைகளில் பாரத நாட்டு விடுதலை வீரர்களின் உயிர்த்துடிப்பும். உரிமை உணர்ச்சி வேகமும். சுதந்திர வேட்கையும் பெருக்கெடுத்துப் பாய்கின்றன.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ ? — என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?

ஆரமுதமாகிய வீரசுதந்திரத்தை வேண்டி விடுதலைப் போர் புரிகின்ற சுதந்திரத் தொண்டர்கள், அடிமை வாழ்வுடன் கூடிய இழிந்த பதவி, பட்டம் முதலியவற்றைப் பெறுவதற்காக அடிமை வாழ்வாகிய கள்ளை உண்பதற்கு முயல மாட்டார்கள் எனப் புகழ்ந்துரைக்கிறார்.

புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல் — அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ?

புகழும் நல்லறமும் தான் நிலையாக நிற்கக் கூடியவைகள் என்பதை உணர்ந்த சுதந்திரத் தொண்டர்கள், பிறர் இகழ்ந்து கூறத்தக்கதாக அடிமையாய் அடங்கியிருந்து எளிய தொழில்களைப் புரிந்து வாழ விரும்ப மாட்டார்கள் என்று பெருமிதத்தோடு கூறுகிறார்.

தொண்டு செய்யும் அடிமை உனக்குச்
சுதந்திர நினைவோடா ?

எனப் பிறிதொரு இடத்திலும் இடித்துரைக்கிறார்.

பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல் — மானம்
துறந்தறம் மறந்தும் பின் உயிர் கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

பிறந்த யாவரும் இறப்பது உண்மையென்று தெளிந்த சுதந்திர தொண்டர்கள், மானத்தையும் அறத்தையும் கைவிட்டு அடிமைகளாக உயிர் வாழ்ந்திருப்பதை இன்பம் என்று ஒரு போதும் எண்ணமாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுகிறார்.

மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல் — அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுள தோ?

மக்கள் பிறப்பின் மேம்பாட்டை உணர்ந்த சுதந்திரத் தொண்டர்கள், தாம் சுதந்திரப் போரில் ஈடுபடுவதினால் இறக்கும் நிலைமை ஏற்பட்டாலும் அஞ்சி அடிமைகளாக இருப்பதற்கு உடன்பட மாட்டார்கள் என, உணர்ச்சிப் பெருக்குடன் உரைக்கிறார்.

சதையைத் துண்டு துண்டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ ? — ஜீவன் ஓயுமோ?

என்று ஓர் கவிதையில் உயிர்த்துடிப்புடன் கூறுகிறார்.

விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

பேரொளி பரப்பி நிலைபெறச் செய்யும் இனிய சுதந்திர வாழ்வை இழந்து, சுதந்திரத் தொண்டர்கள் அடிமை வாழ்வை மேற்கொள்ளமாட்டார் என்றும், அப்படிச் செய்வது சூரியனை விற்று அதற்குப் பதிலாக மின் மினியை விலைக்குப் பெறுவது போன்றதெனவும் பழித்துரைக்கிறார்.

மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

உலகில் அடையும் சிறிய இன்பங்களுக்காக மாண்பு மிக்க சுதந்திரத்தை உண்மைச் சுதந்திரத் தொண்டர்கள் இழந்து வாழ விரும்பமாட்டார்கள் என்றும், அப்படி வாழ்வது தனது இரண்டு கண்களையும் விற்று அழகு நிறைந்த சித்திரத்தை வாங்குவதற்கு ஒப்பான செயல் என்றும், தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகிறார்.

ஒன்றென்று கொட்டு முரசே! — அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

அன்பினால் தான் உலகில் அமைதியையும் ஒற்றுமையையும் காணமுடியும் என்னும் உண்மையை பாரதியார் மிகத் தெளிவாகக் கூறுகிறார். □

# மலையகத்தில் பத்திரிகை வியாபாரம்

□ இந்திரஜித் □

மலைநாட்டில் மனித உழைப்பு உறிஞ்சப்படுவது பலரும் அறிந்த உண்மை. தற்போது மலைநாட்டு மக்களின் 'வறுமை' விற்கப்பட்டு சிலருக்கு பணம் தேட உதவுகிறதும் பலரும் அறிந்து வரும் உண்மையாக உருப்பெற்று வருகின்றது. பலர் அறிந்து கொள்ள வேண்டிய இன்னோர் உண்மையும் உண்டு. அதுதான் மலையகத்தில் வெளியாகும் சங்கப் பத்திரிகைகள்.

இது எதற்காக, யார் பலன் அடைவதற்காக வெளியிடப் படுகின்றது என்பது சுவாரசியமான ஒரு சங்கதியாகும்.

தேசிய முரசு, தென்றல், ஜனநாயக தொழிலாளி, காங்கிரஸ், மாவலி, புதிய காற்று என்பன தொழிற்சங்கப் பத்திரிகைகள். குன்றின் குரல், கொந்தளிப்பு, தாக்கம், முரசு என்பன வெளிநாட்டுப் பண உதவியோடு வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகை ஏடுகள்.

மலையகத்தில் 1980 இல் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி ஐந்து இதழ்களோடு நின்று போன தீர்த்தக்கரை சஞ்சிகை கூட வெளிநாட்டுப் பண உதவி கிடைத்து வெளியான சஞ்சிகை தான்.

இந்தப் பருவ வெளியீடுகள் பத்திரிகைகள், எந்த நோக்கோடு வருகின்றன? நாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற கருத்துக் கோட்பாட்டையும், தொழிற்சங்க நடவடிக்கைகளையும், அங்கத்தினர்களிடையே பரப்பும் பணியில் வெற்றி காண்கின்றனவா? தனது அங்கத்தவர்களிடையே எழுதும் பழக்கத்தையும், வாசிக்கும் பழக்கத்தையும் வளர்ப்பதற்கு உதவுகின்றனவா? அல்லது தாம் பிரதிநிதித்துவம் வகிக்கும் சமூகத்தவர்களின் கலை, இலக்கிய முயற்சிகளை வளர்த்தெடுக்கும் திட்டங்களை யாவது அறிமுகம் செய்து வைக்கின்றனவா?

பெரும்பாலானவைகள் தங் சங்கத்தலைவரின் படத்தையும், அவரது முழுப்பக்கப் பேச்சையும், அதுவும் அரைப்பக்க கொட்டைஎழுத்து தலையங்கங்களோடு வெளியிடுவதோடமைந்து விடுகின்றன. அது தவறு என்றுகூறவில்லை; ஆனால் அத்தோடு மாத்திரம் திருப்தி அடைந்து விடுவது தவறு என்றே படுகின்றது.

தொடர்ந்து வெளி வருகிற தொழிற்சங்க ஏடுகளில் குறிப்பிட்டுக் கூறத் தக்கது 'இலங்கைத் தொழிலாளர் கொங்கிரஸ்' வெளியிடும் 'காங்கிரஸ்' இதழாகும்.

இதுவும் 'திசை'யும் ஒரே அளவில்; ஆனால் பக்கங்கள் வித்தியாசத்தோடு வெளிவருகின்றன. இந்த இரண்டையும் கொஞ்சம் ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

திசை(10/11/89)-12 பக்கங்கள், விலை நான்கு ரூபாய், இடம் பெற்ற விளம்பர விகிதாசாரம் 6% - திசை 1 முகம் 44.

காங்கிரஸ் (1/11/89)-8 பக்கங்கள், விலை மூன்றைம்பது, இடம்பெற்ற விளம்பர விகிதாசாரம் 15%-சுவடி 26 ஏடு 20.

மலையக மக்கள் எத்தனை விதமான சுரண்டலுக்குள்ளாகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த இது போதாதா? இந்தச் சுரண்டலின் பின்னர் ஒரு சமூகத்துக்குப் பயன்படும் நோக்கிருந்தாலாவது பரவாயில்லை. அதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தத் தொழிற்சங்கப் பத்திரிகைகள் இலவசமாகக் கொடுபடுவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அங்கத்தவர் தொகைக்கேற்ப தோட்டத் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் 'கோட்டா' பணத்திலிருந்து, இந்தப் பத்திரிகைகளுக்கான செலவுத்தொகைகள் கழிக்கப்பட்டு விடுகின்றன. அதாவது அந்தப் பத்திரிகைகளுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 'விலை' பத்திரிகை அச்சாகும் போதே 'ரொக்கமாக' கை மாறி விடுகின்றது. இதனால், பிற சஞ்சிகைகள், சிற்றேடுகள், பத்திரிகைகள் போல 'விற்பனை' அவைகளுக்கு ஒரு பிரச்சினையல்ல. எனவே, இதில் வெளியா

(5ஆம் பக்கம் பார்க்க)

## தூவானம்

**○ முதற்பிரதி சிறப்புப் பிரதிகள் யாருக்கு?**

தவறாக விளங்கிக் கொள்வதிலும், 'கிண்டலாக' அதனைத் தூக்கிப் பிடிப்பதிலும் இலக்கியக்காரர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பது, நமது அனுபவத்தில் புதியதொன்று அல்லத்தான்.

நூல்வெளியீட்டு நிகழ்ச்சிகளில் பிரமுகர்கள். வியாபாரிகள் போன்றோருக்கே முதற் பிரதி, சிறப்புப்பிரதிகள் வழங்கப்பட்டுவருவது பற்றிய அதிருப்தியினை, முன்பொருமுறை குறிப்பிட்டிருந்தேன்; அதில், எவ்வித முரண்பாடோ வரட்டுத்தனமோ இல்லை.

மனவிருப்புடன் உதவி செய்பவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில் தவறில்லை. ஆனால், எமது நூல் வெளியீட்டு விழாக்களில் என்ன நடக்கிறது. பிரமுகர்கள், வியாபாரிகளிடம் தாம் எதிர்பார்க்கும் பணத்திற்காகவே, முதற்பிரதி சிறப்புப் பிரதி பெறும் கௌரவத்தை, அவர்களுக்கு நூலாசிரியர் வழங்குகிறார். பணம் உள்ளவராக இருப்பதே அவரது தகுதியாகிறது. சமூக நோக்கு, இலட்சியம், மறுமலர்ச்சி, போராட்டம், இழப்பு என்றெல்லாம் பெரிதாக முழங்குகின்றோம். இறுதியில் பணம், செல்வாக்கு உள்ளவர்களிடம் சரணடைகிறோம்; அவர்களும் தமக்குத் தகுதியில்லாத கௌரவத்தினைப் பணம் கொடுத்து 'வாங்கிச்' செல்கிறார்கள்! இது சரியானதுதானா?

முதிய எழுத்தாளர், கலை-இலக்கியத்துறையில் ஆக்கபூர்வமான பணிபுரிந்தோர் / புரிவோர், சமூகநலன் சார்ந்த துறைகளில் ஈடுபட்டு உழைப்போர், கல்வித்துறையில் மதிப்புக்குரிய தொண்டாற்றுவோர் என்போரை அழைத்து முதற் பிரதி, சிறப்புப் பிரதிகளை வழங்கிக் கௌரவிப்பதை நாம் ஏன் செய்யமுடியாது?

கஷ்டப்படும் எழுத்தாளனுக்கு பண உதவி தேவைப்படுகிறது என்று சமாளிப்புக் கூறப்படுகிறது. யதார்த்தத்தில், இச் சடங்கில் பெரிய பண உதவி கிடைக்கிறதா எனப் பார்த்தால், மிகச் சில புறநடைகளைவிட பொதுவில் பெரிய உதவியாக இருப்பதுமில்லை. புத்தகத்தின் விலை 40/= ரூபாவென்றால், 150 அல்லது 200 ரூபா தான் கொடுக்கிறார்கள். மூன்று பேரை ஒழுங்குசெய்தாலும் கிடைக்கக்கூடியது 600/= ரூபா. இது 15 பிரதிகளுக்குரிய தொகை. 1000 பிரதிகளை அச்சிடும் எழுத்தாளன் இந்தப் 15 பிரதிகளால் தான் கஷ்டம் நீங்கிவிடப் போகிறானா?!

எப்படியாயினும் அடிப்படைக் கேள்வி என்னவென்றால், பொருத்தமில்லாதவர்களை முதன்மை நிலையில்வைத்துக் கௌரவிப்பதன் மூலம் பணத்தையோ அல்லது வேறு லாபங்களையோ எதிர்பார்க்கும் நிலைக்கு, நாம் —இலக்கியவாதிகள் (இலக்கிய மன்னர்கள்?) — தாழ்ந்து போகலாமா என்பதே!

— நீலாம்பரன் □

# மலேயகத்தில்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்ற ஆக்கங்களும் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

தன் தலைவர் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டு தொழிலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட படத்தை மீண்டும் மீண்டும் ஆண்டு தோறும் பிரசுரித்துக் கொள்வதற்கு, 'ஜனநாயக தொழிலாளி'க்கு அலுப்புத் தட்டுவதில்லை.

அரசியலில் குதிப்பதற்கு முன்னரேயே ஜெயலலிதாவைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதி வெளியிடுவதற்கு, பிறநாட்டுப் பணஉதவி பெற்று வெளியாகும் 'கொந்தளிப்பு' தயங்கவில்லை. இவை உழைப்பாளி மக்களுக்கு எந்த விதத்தில் பயன் தரப் போகின்றன?

இவைகளோடு மலேசியாவிலிருந்து வெளிவருகின்ற ஒரு தொழிற்சங்க ஏடான சங்கமணி யைப்பற்றியும் ஒப்பிட்டுப் பாருங்கள் அதில் எழுதிப் பழகிய மலேசிய தோட்டப் புறத்தமிழர்கள் சிறுகதை ஆசிரியர்களாக வளர்ந்து சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கின்றனர். அதில் வளர்ந்த கவிஞர்கள் தங்களின் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர்.

தோட்டப்புறப் பின்னணியில் முப்பது பக்க அளவில் குறுநாவல்கள் எழுதப்பட்டு, அந்தத் தொழிற்சங்க இதழ்களோடு இணைத்து விற்கப்பட்டிருக்கின்றன.

மொத்தத்தில் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிப் பேசுகையில், இந்த 'சங்கமணி' இதழைப்பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டிய கட்டாயம் ஏற்படுமளவுக்கு, அதன்பணி சிறப்புடன் விளங்குகின்றது.

இங்கு நிலைமை எப்படி? 'மாவலி' மறைந்த கவிமணி சி. வி. ஆசிரியராக இருக்கும் போது சில உருப்படியான காரியங்களைச் செய்தது. சௌமியம் நம்பிக்கையூட்டுவதாயிருந்தாலும் சிசுமரணமாகி விட்டது என்பது, நம்பகரமான செய்தியாகும்.

மலேசிய 'சங்கமணி' யின் வெற்றிக்குக் காரணம், அது ஒரு சங்கப் பத்திரிகையாக இருந்தாலும், ஆசிரியர் பதவி வகிப்பவர்கள் இலக்கிய அறிவும் ஆர்வமும் மிகுந்தவர்களாய் இருப்பதுமாகும்.

இங்கோ கமிஷன் தேடும் பேர் வழிகளும், கட்சித்தலைவரின் முன் கைகட்டி நிற்பவர்களுமே ஆசிரியர்களாகப் பம்மாத்துக் காட்டுகின்றார்கள். வாசகர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கில்லை.

மலையகத்தில் சுதந்திரமான சஞ்சிகை முயற்சிகள் நசிந்து போவதற்குக் கூட, இந்தப் பத்திரிகை வியாபாரமும் ஒரு காரணம் எனலாம். மலைமுரசு, மலைப்பொறி, பூங்குன்றம் என்று ஒரு சிலவே சிறிதுகாலம் தாக்குப் பிடித்து நின்றன.

இன்று இந்த வரிசையில் ப்ரியநிலா, கொழுந்து என்ற இரண்டு சஞ்சிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளாவது நிலைத்து நின்று மலையகத்தில் ஆரோக்கியமான பத்திரிகை எழுத்துக்களை வளர்த்தெடுக்க உதவவேண்டுமென்று, மலையக இலக்கிய வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் விரும்புகின்றார்கள். □

# அறிவியல் உலகம்

## அறிவியல் துணுக்குகள்

ஜி. எஸ். சவரிமுத்து

**1. பஞ்சா, இரும்பா எது முதலில் தரையை அடையும்?**

விஞ்ஞானிகளாகிய கலிலியோ, சேர் ஐசக் நியூட்டன், ஐன்ஸ்ரைன் ஆகியோரின் கருத்துப்படி வெவ்வேறு பதார்த்தங்களால் செய்யப்பட்ட இரு சமதிணிவுடைய பொருள்கள் வெற்றிடத்தில் ஒரே நேரத்தில் போடப்படும்போது அங்கு ஈர்ப்பு விசையின் தாக்கம் இல்லாததால், அவையொரே நேரத்தில் தரையையடையும். இது, சராசரியாக எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

இற்றைக் காலம்வரை இருந்து வந்த இந்தத் தத்துவம், இப்போது தவிடுபொடியாக்கப்பட்டுள்ளது. எப்றெயிம் பிச்பாக் (Ephraim Fischbach) எனும் பௌதிகப் பேராசிரியரும் அவரது 3 மாணவரும், ஒரு புதிய உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர். அடிப்படையில் உள்ள 4 விசைகளாகிய ஈர்ப்புவிசை, காந்த விசை, அணுக்கருவின் துணிக்கைகளைப் பிணைத்து நிற்கும் விசை, கதிர்த்தொழிற்பாட்டினால் உருவாகும் விசையாகியவற்றைவிட, இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள விசை, hypercharge என்ற பெயரைப் பெறுகிறது. இது மிகவும் வலிமை குறைந்த ஒரு விசை. இவ்விசை இரும்பில் வலிமையாகவும், ஐதரசன் வாயுவில் வலிமை குறைவாகவும் செயற்படுகிறது. ஆக மொத்தம் முடிவு என்ன தெரியுமா? சமதிணிவு இரும்பையும் பஞ்சையும் வெற்றிடத்தில் விழவிட்டால்,முதலில் தரையை அடைவது இரும்பு.

**2. குறும்பார்வை உடையவர் கண்ணாடிக்கு 'டாட்டா' காட்டலாம்.**

குறும்பார்வைக் குறைபாடுடையோர் இனிமேல் கண்ணாடியே பாவிக்க அவசியமில்லாமல் போகும். இக் குறைபாட்டுக்குக் காரணம் கண்ணின் பகுதிகளாகிய கண்மணி, ஐரிசு ஆகியவற்றின்மேல் ஒரு படலம் வளருதல் ஆகும். ஆனாலும் கொம்பியூட்டர்கள் கொண்டு கட்டுப்படுத்தப்படும் 'லேசர் பாய்ச்சி' யின் உதவியுடன் லேசர் கதிர்களினால், இப்படலத்தை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்துள்ளனர். "20 செக்கன்களில் இந்த சிகிச்சை முறை முடிந்துவிடும்" என்று, இதனைக் கண்டுபிடித்துள்ள வைத்தியக் குழுவினரில் ஒருவரான ஹெர்பேட் கவ்மான் (Herbert kaufman) தெரிவித்தார். 70 குரங்குகளிலும், 8 மனிதரிலும் இச் சிகிச்சைமுறை பரிசோதித்தும் பார்க்கப்பட்டுள்ளது. இச் சிகிச்சையினால் வேறுவேறு பக்கவிளைவுகள் தோன்றக்கூடும் என அச்சுறுவதினால், இன்னும் 3 வருடங்களின் பின்னரேயே இது பாவனைக்குவரும். அப்போது, தங்கள் கண்ணாடிகளை,பாவிப்பவர்கள் நிரந்தரமாகக் கழற்றிவிடலாம்.

**3. காளான் ஒரு ஊன் உண்ணி!**

சிலவகையான காளான்கள் நுண்ணிய விலங்குகளைப் (Microscopic Animals) பிடித்து உண்பதாக அறியப்பட்டுள்ளது. ஆர். ஜி தோண் (R. G. Thorn), ஜி.எல் பறன் (G.L. Barran) என்ற இரு தாவரவியல் ஆராய்ச்சியாளரின் கண்டுபிடிப்பின்படி, அவர்கள் பரிசோதித்த 27 காளான் வகைகளில் 11 வகைகள் ஊனுண்ணிகள் ஆகும். சிப்பிக் காளான் (Oyster Mushroom) என்னும் வகை இவற்றில் குறிப்பிடக் கூடிய ஒருவகையாகும். இவை அழுகிய மரத்தண்டுகளிலே வாழுகின்றன. இவற்றுக்கு நைதரசன் போதாமல் இருப்பதனாலேயே ஊனை உண்ணுகின்றன என அறியப்பட்டுள்ளது.

**4. சூப்பர் வயர்கள்!**

நமது அன்றாட வாழ்க்கையிலே மின்னைக் கடத்துவதற்காகப் பாவிக்கப்படுகின்ற வயர்களில் பெருமளவு மின்சாரம் வேறு சக்தி வடிவங்களுக்கு மாற்றப்படுவதினால், சக்தியில் இழப்பு ஏற்படுகிறது. பெரிய அணு உலைகளுக்கும், ஆய்வுகூடங்களுக்கும் மின்னைக்கொண்டு செல்லும் வயர்களில் ஏற்படும் இத்தகைய சக்தியிழப்பு, பலகோடி டொலர் நஷ்டத்தை வருடா வருடம் உண்டாக்குகிறது. ஆனால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இலட்சிய கடத்திகள் எனப்படுகின்றசூப்பர் வயர்கள், இக்குறைபாட்டை நிச்சயம் நிவர்த்தி செய்துவிடும். லந்தனம் - செம்பொட்சைட் (Lanthanum - Copperoxide), பேரியம் (Barium) என்பவற்றைக் கொண்டு செய்யப்பட்டுள்ள வயர்கள் இலட்சியத் திண்மை கொண்டனவாய் விளங்கும். ஆரம்ப காலத்தில் மிகக்குறைந்த வெப்ப நிலையிலே (-460 $^{0}$f) இந்த இலட்சியக் கடத்துகை (Super Conductivity) சாத்தியமாக இருந்தது. றச்லிக்கான் (Ruchlikon), அலெக்ஸ் மூலர் (Alex Muller) ஜோர்ஜ் பெட்னோஸ் (George Bednorz) ஆகிய மூன்று விஞ்ஞானிகளும் இவ்வாராய்ச்சியில் வெற்றிகண்டு, அறைவெப்ப நிலையிலும் இலட்சியக் கடத்துகையைச் சாத்தியமாக்கி உள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பின் காரணமாக இன்னும் சில ஆண்டுகளில், மேலும் சிறியதும் விரைவானதுமான கொம்பியூட்டர்களையும்; விரைவான மின்சார வண்டிகளையும் காணலாம்!

**5. பூனைகளைப்பற்றி. . . .**

பூனைகள் 17,000 ஆண்டுகளுக்கு மேலாக மனிதனின் செல்லப்பிராணியாக இருந்து வந்துள்ளன. ஒரு பூனை சராசரியாக 18 வருடங்கள் வாழ்கின்றது. பூனையின் கண்கள், காதுகள், மீசைகள் (Whiskers) என்பவை மிக உயர் உணர்திறன் உடையவை; இருட்டில் கூட 110 யார்களுக்கு அப்பால் இருக்கும் எதனையும் இனங்காணக் கூடியது. நித்திரை செய்யும், பூனையொன்று 50 அடிக்கப்பால் ஒரு எலியின் சத்தத்தை இனம்காணக் கூடியது. நித்திரை செய்யாத போது 65 அடிக்கப்பாலும் இனங்காணக்கூடியது. அதனுடைய பார்வைத் திறனுக்கும், கேட்கும் திறனுக்கும் உதவும் முகமாகவே மீசைகள் அமைந்துள்ளன. 'பிராணிகளின் நடத்தை சம்பந்தமான ஆய்வகம்' (Institute For Behavioral Physiology) வெளியிட்டுள்ள தகவல்களே இவை. □

# இளவட்டம்

## தன்மானப் பாதங்கள்

விலா எலும்புகள்
வரிக் கோலம்
இன்பத்தின் ரேகைகள்
வதனத்தில்,
குழிவிழுந்து
கிடங்காகக் கண்கள்.

தட்டுத் தடுமாறி
நடையினில்,
முதுமையின் தோற்றம்
முழுமையாக.

வறுமையின் விரிவினைச்
சுருக்க
தினம் வலம்வரும்
இக் கிழம்.

உடல் ஓடாகியும்
உழைத்து உண்ண
வேண்டும் எனும்
தன்மானத்தில்
தினம் நடைபயிலும்
பாதங்கள் !

— செல்வி
ஜெஸ்மின் அன்ஸார் □

## ஒரு புத்தகம்

தூசி படிந்த
புத்தகம் ஒன்றை
எடுத்துத் தட்டிப்
புரட்டினேன்.

முன்னுரை கூட
முகாரி பாடியது.

கவலைப் பக்கங்களை
திருப்பினால்
கண்ணீர் வரிகள்.

எழுத்துக்கள் எல்லாம்
அழிந்திருந்தன
வாசித்தவர்களின்
கண்ணீர் பட்டு.

இடையில் இருந்த
புகைப்படங்கள் கூட
சிவப்பாகியிருந்தன
அவற்றின் வெம்மையால்.

புத்தகத்தின்
தலைப்பைப் பார்க்க
தலை நிமிர்ந்தேன்
" எங்கள் தமிழினம் "

— சாவ. சண்முகதாசன் □

## எதற்காக?

நம்மை நாமே
தொலைத்து விட்டு
என்னத்தைத்தான்
தேடிக் கொண்டிருக்கிறோம்?

மனுஷத்துவத்தை
விற்று வாங்கும்
விடுதலை எதற்காக?

— நல்லூர் தாஸ் □

## விளக்கம்

எட்டாம் வகுப்பு
என் தம்பி
என்னிடம் கேட்கிறான்.

ஜனநாயகம்
என்பது என்ன?
"எனக்குத் தெரியாது!"
இது தான் என் பதில்.

வரைவிலக்கணத்தை
மட்டும்
வடிவாகவே விளக்கலாம்.

பின்பு,

இவையெல்லாம் எவை?
என்றால்
என்ன சொல்வேன்?

— ரவி □

## நிஜங்களின் நிழல்கள்

கண்களை உருட்டியும்
வாயினைப் பிளந்தும்
சைகைகள் காட்டி
நித்திரா தேவி
அழைத்தாள்.

கண்ணயரக் கட்டிலில்
புரண்டேன்.
மேசையில் இருந்த
மணிக் கூட்டின்
"டக்","டக்" ஓசையும்,
இதயத்துடிப்பின்
"டப்","டப்" சத்தங்களும்
தாலாட்டாய் மாற
தானாகவே
கண்கள் மூடுகின்றன.

சிறிது நேரத்தில் ...
கைகள் கட்டப்பட்டு,
தர, தரவெனச்
செத்த நாயிலும்
கேவலமாக வீதியால்
இழுத்துச்செல்லப்படுகின்றேன்.

பாதையின் ஓரத்தில்
மரத்துடன்
கட்டப்பட்ட நான்,
என் புருவத்தை நோக்கி
ஏதோ வொன்று கறுப்பாக வர
"ஆ"வென அலறிக்
கண் விழித்த போது,
தலையில் சிறிது காயம்தான்.

— ஏ. லீ. சறூக் □

திசையின் சிறுகதை

# அர்த்தத்தைத் தேடி...

வடகோவை வரதராஜன்

சென்றவாரத் தொடர்ச்சி

வெளியே மாலைமயங்கி வந்தது. தாராக் குளத்து வளைவில் புசேல் எனப் புதர் கொண்ட மூங்கில் பற்றைகட் கூடாக செக்கச் சிவந்த சூரியன் சரிந்து இறங்கினான்!

மாலைக் காற்றில் மூங்கில் இலைகள் துடித்துச் சிலிர்த்தன.

வீசிய மெல்லிய காற்று குளத் தங்கரையில் மரம் முழுவதுமாக செக்கச் சிவந்து பூத்திருந்த என்புருக்கி மரத்தின் பூக்களை மெதுவாக உதிர்த்து குளத்து நீர்ப் பரப்பில் தாலாட்டியது! கூட்டத்தைப் பிரிந்த நீர்க்காகமொன்று சோகமாகக் கத்தியபடி பறந்தது.

"என்ன கடுமையாய் யோசிக்கிறாய்; உணர்ச்சி வசப்பட்டிட்டாய்போல கிடக்கு" — ராஜனை இவ்வுலகிற்கு இழுத்தான் விஜயன்.

"இல்லை மச்சான்; ஒருத்தன்ரை பலத்தோடை பலயீனத்தையும் சேர்த்து என்னாலை ஏற்றுக்கொள்ளேலும்; பலத்தைப்போலை பலயீனமும் ஒருத்தன்ரை ஒரு அம்சம் எண்டது எனக்கு நல்லாய்ப் புரியுது! அதனாலை ஒருத்தன்ரை பலயீனமான அம்சங்களுக்காக எந்த ஒருத்தனையும் நான் வெறுக்கிறேல்லை. எவ்வளவோ பெருந்தன்மையோடைதான் இவங்களோடை நான் பழகிறதாய் நினைக்கிறன்!

அப்பிடி கௌரவமாய் நடத்தியும், பழகியும் சிலபேர் என்ரை தலைமேலை மிளகாய் அரைச்சால் எனக்குவாற கோபத்தை அடக்கேலாமல் வெறி பிறக்குது. அந்த வெறியாலை கிட்டடியிலை ஆருக்கும் அடிச்சுப்போடுவேன் போலை கிடக்கு" — மிகவும் மனம் வருந்திச் சொன்னான் ராஜன்.

"நீ அப்பிடி அடிச்சா சந்தோசப்படுவன்"!

"என்ன?" — அதிர்ந்தான் ராஜன்.

"உண்மையாத்தான் சொல்லுறன்; ஆரேனுக்கும் அடிச்சுத்தான் நீ சமநிலைக்கு வரவேணும். நாங்கள் உணர்ச்சி பூர்வமாய் வாழ்ந்திட்டால் 'ரென்சன்' இல்லை.

அறிவு பூர்வமாய் எதையும் கீறிக்கிழிச்சுப் பார்க்கிறபடியால் தான் இப்பிடி வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன எண்ட சங்தேகம் வருகுது. உணர்ச்சி வழியிலை நிண்டு கோபம் வாறநேரம் வாய்கிழியப் பேசியோ; மூக்குடைய அடிபட்டோ கிளர்கின்ற உணர்ச்சிகளை வடிஞ்சோட விட்டிடவேணும். ஆனா நாங்கள் வடிகாலை வடிஞ்சோட வேண்டியதை கௌரவம் எண்டும்; மரியாதைக் குறைவு எண்டும் தேக்கிவைக்கிறம். அந்தத் தேக்கம் எப்பவாவது கரையை உடைச்சுப் பயங்கரமாய் பாயும். அப்ப நீ கொலை கூடச் செய்வாய்.

சில இடங்களிலை அறிவுபூர்வமாய்வாழுறதைவிட உணர்ச்சி பூர்வமாய் வாழுறது தான் நல்ல......" இடையில் கதையைச் சடக்கென நிறுத்தி அவசரம் அவசரமாய் ராஜனைச் சுரண்டி கடையின் வாசலைக் காட்டினான்.

இருவரும் கையால் கனிந்து கொண்டிருந்த சிகரற்றுக்களை சடக்கெனப் பொத்திக்கொண்டனர். இதற்கிடையில் அந்த விரிவுரையாளர் திரும்பி நடந்தார்.

மாலைவேளைகளில் இயற்கை அழகினை இரசிக்க உலாப் போகின்ற அவர் அந்த அழகிய சூழ்நிலையில் தேநீர் அருந்த வந்திருக்கலாம். இங்கே அவர்கள் இருப்பதைப் பதைப் பார்த்து அவர்களைத் தொந்தரவு செய்து, தானும் தொந்தரவிற்குள்ளாகாமல் திரும்பிச்சென்ற அவரின் பெருந்தன்மை அவர்களை வியக்கவைத்தது.

ஏ. ஐ. சென்ரர் பொலிகானை ஒன்று சங்கு ஊதுவதைப் போன்று எக்காளமிட்டது. அதைத் தொடர்ந்து 5 மணியாகிவிட்டதை அறிவிக்கும் ஜாம் (f) பக்ரறியின் மணிச் சத்தம். சிறிது நேரத்தின் பின் ஜாம் (f) பக்ரறியில் இருந்தும், பினகா பிஸ்கற் கொம்பனியில் இருந்தும் திரள் திரளாக பெண்கள் கூட்டம் ஊர்வலம் வந்தது.

அந்தப் பெண்களை இருவரும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினர்.

சிரிப்பும் உல்லாசமும் கொப்பளிக்க; ஒரு சிட்டுக்குருவிக் கூட்டம் போல, ஒரு வண்ணத்துப் பூச்சிக் கூட்டம் போல வழியெங்கும் தெபீடியா ரோசா ஊதாப் பூச்சொரிந்திருக்கும் அந்த அழகிய தெருவின்மீது என்ன குதூகலத்துடன் செல்கிறார்கள் அவர்கள்!

'இவர்கள் எப்பொழுதாவது வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றிச் சிந்தித்திருப்பார்களா?

"விஜி; உன்னைக் கேக்க வேணும் எண்டு கனகாலம் நினைச்சிருந்தன்; இப்பான் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. நீ காதலிச்சவன் எண்ட முறையிலை கேக்கிறன் நீ உன்ரை காதலியோடை இருக்கேக்கை வேறு பெண்களைப் பார்த்து சலனப்பட்டிருக்கிறியா?"

"சிக்கலான கேள்வியெல்லாம் கேட்கிறாய்" என்று சிறிது நாணிச் சிரித்தான் விஜயன்.

உண்மையாய்த்தான் கேட்கிறன், காதலிக்கிற கலியாணம் கட்டின ஆம்பிளையள் எல்லாருக்கும் இப்பிடியொரு சலனம் இருக்குமா; இல்லையா எண்டு விஞ்ஞான முறைப்படி கணக்கிலெடுக்க வேணும் எண்ட ஆவல் நெடுநாளாயே என்னட்டை இருக்கு".

கேலியாகச் சிரித்த விஜயன் "ஆராய வெளிக்கிட்டால் உனக்குத் தோல்விதான் கிடைக்கும். மனம் திறந்து உன்னட்டைச் சொல்லுறன்; நான் சலனப்பட்டிருக்கிறன். அது தவிர்க்க முடியாத — ஆண்களுக்கே உரிய சலனம். ஆனா அறிவு பூர்வமாய் சிந்திச்சு அதைக் கட்டுப்படுத்திப் போடுவன். ஏன் நீ சலனப்படமாட்டியா"

"அதைப்பற்றி இப்ப என்னாலை சொல்லேலாது. ஒருத்தியைக் காதலிச்ச பிறகு அல்லது கல்யாணம் செய்தபிறகு தான் அதின்ரை உண்மை பொய் தெரியும். ஆனா கம்பீரமான ஓர் ஆளைப் பார்த்து வட் எ ஹான்சம்(B) போய் என்று வியக்கிற மாதிரி, கல்யாணத்தின் பின்னும் அழகிய பெண்ணொருத்தியைக் கண்டால் 'ச்சாய் எவ்வளவு வடிவு' என்று வியப்பதில் அல்லது சொல்வதில் தவறொண்டும் இல்லை எண்டுதான் எனக்குப் படுகுது"

"நீ ரொம்ப 'ஐடியலிஸ்ராய்' இருக்கிறாய் ஆனா உலகம் உனக்கு நேர் எதிர்த்திசையில் சுழலுது. நீ காண்டேகர் படிச்சிருக்கிறியா? காண்டேகர் ஒரு இடத்திலை சொல்லுறார் தன் கணவனைத் தவிர வேறோர் அன்னிய ஆளைப் பார்த்து சலனப்படாத பெண்ணோ, தன் மனைவியைத் தவிர வேறோர் பெண்ணைப் பார்த்து சலனப்படாத ஆணையோபார்ப்பது அரிதென்று."

"காண்டேகர் ஓர் எழுத்தாளர்! மனோவக்கிரங்களையும் பாலியல் முரண்பாடுகளையும் கதைகளாக்கும் எழுத்தாளர். அவரின் கூற்று ஊகத்தில் எழுந்த ஒரு எடுகோளாய் இருக்குமே ஒழிய விதியாய் இராது. ஆனா நான் இதைப் பற்றி விஞ்ஞான பூர்வமான ஓர் கணிப் பெடுக்கப் போறன்"

தேநீர்க் கோப்பையின் அடிப் பாகத்தை மேசையில் உருட்டியபடி கூறினான் ராஜன்.

கேலியாய்ச் சிரித்தான் விஜயன். "ஆர் உனக்கு உண்மையைச் சொல்லப் போகினம். உன்னிடம் கதைத்தால் கூட தமது கற்பின் 10% குறைந்து போகும் என்று பெண்கள் முந்தானையை இழுத்து மூடுவார்கள்! இவர்களிடமா போய் சலனப்படுவீர்கள் எனக் கேட்கப் போகிறாய்! சுத்த மடைத்தனம்"

உண்மையில் இந்தப் பம்மாத்து பண்ணுற பெண்கள் மீது எரிச்சலுற்றான் விஜயன். இங்கே இவ்வளவு (f) பிறீயாவும்கலகலப்பாயும் பழகிவிட்டு; இவர்கள் அன்புச் சகோதரன் விஜயன் என்றோ அல்லது இப்படிக்கு அன்புச் சகோதரி மேரி என்றோ கடிதம் எழுதும் போது இவனுக்கு அது ரொம்ப கொச்சையாய் இருக்கும்! அதென்ன அன்புச்சகோதரன்?

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஓர் நட்பு நிலவக் கூடாதா? இப்படி அன்புச் சகோதரன் போடாவிட்டால் ஆண்கள் நம்பால் ஆகர்சிக்கப்பட்டு விடுவார்கள் என இந்தப் பெண்கள் அஞ்சுகிறார்களா? இல்லைத் தாமே சில சமயம் ஆண்கள் பால் ஈர்க்கப்பட்டு விடுவோம் என்று முன்னேற்பாடாக இந்த சகோதரத்துவத் தளைகளைப் பூட்டிக் கொள்கிறார்களா?

தூரத்தில் இலங்கக் கோன் விடுதியின் மின் விளக்குகள் தெரிந்தன. வைற் ஹவுஸ் முன்னால் உள்ள நீர்வாகை மரத்தில் மின் மினிப் பூச்சிகள் ஒளிக் கோலம் போட்டன.

"ஆணுக்கும் பெண்ணுக்கும் நிலவுகிற நட்பு பற்றி நீ என்ன நினைக்கிறாய்" — ராஜன்

"இங்கே எங்கே நட்பு நிலவப்போகிறது. ஓர் ஆணும் பெண்ணும் பழகினால் அது காதலாய் இருக்கும் அல்லது சகோதரத்துவம் என்று பம்மாத்துப் பண்ணிக் கொள்கிற ஏதோவொன்றாய் இருக்கும்." மங்கல் ஒளியில் கண்கள் பளபளக்க கூறினான் விஜயன்.

"ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள நட்பை சரியாய்ப் புரிந்து கொள்ளுற அளவிற்கு எமது சமூகம் இன்னும் முன்னேறேல்லை."

"சமூகமென்ன பழகிற பெண்களில் பாதிப்பேர் தப்பிதமாகவே புரிந்து கொள்வார்கள். நட்பு ரீதியில் நாம் கதைக்கிற கதைகள் ஒவ்வொன்றையும் -சினே கபூர்வமாய் நாம



அவர்கட்குச் செய்கின்ற உதவியொவ்வொன்றையும், நாம் அவர்கள் பால் பிரேமை கொண்டு செய்கிற செய்கைகளாகவே எடுத்துக் கொள்வார்கள். காதலனை (b)போய் (f) பிறெண்ட் என்பவர்கள் அல்லவா இவர்கள்! காதலனை (b)போய் (f) பிறெண்ட் என்பவர்கள் அல்லவா இவர்கள்! காதலனை (B) போய் (f) பிரணட் என்றால் (B) போய்பிரண்டை எப்படி அழைப்பார்களோ?"

"ஏன், சகோதரன் எம்பார்கள்!"

இருவரும் உரக்கச் சிரித்து 'வாழ்க சகோதரத்துவம்' என்றார்கள்!

இவர்கள் சிரிப்பால் சலனமுற்ற பள்ளக்கடை முதலாளியும் இவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

"முதலாளி இன்னும் ரெண்டு சிகரற் தாங்கோ"

"மிச்சம் சிகரற் குடிக்குது" முதலாளியின் கொச்சைத் தமிழ் கேட்க இனிமையாய் இருக்கும்.

"ராஜன் உனக்கொரு தேடல் இல்லையா? உனக்கு மனைவியாய் வரவேண்டிய பெண் இப்படித்தான் இருக்க வேணும் எண்டு சில எதிர் பார்ப்புகள் இல்லையா"

"ஏன் இல்லை? இப்ப கூடத் தேடிக் கொண்டுதான் இருக்கிறேன். எனது சிந்தனைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவளாய், கலையார்வம் உள்ளவளாய் ஆன ஒரு பெண்ணிற்கான தேடல் என்னிடம் இருக்கிறது. ஒரு மனைவி எண்ட பதத்தைவிட நானும் நீயும் இப்ப பரிநிர்வாணமாய்கதைக்கிறமே அப்பிடி மனம்விட்டுக் கதைக்கக் கூடிய நண்பி என்ற பதத்தைத்தான் அவளிட்டை எதிர்பார்க்கிறன். ஆனா இந்த தேடலின் ஆர்வம் இப்ப ரொம்ப அருகிவருகுது.

வாழ்க்கையின் நிலையாமை நமக்கப்பாற்பட்ட விதியில் விழுந்து விட்ட நம்பிக்கை; இவையளாலை இந்தத் தேடல் இப்ப குறைஞ்சு கொண்டு வருகுது. ஏதோ வாறவளோடை சமரசம் செய்து கொண்டு போக வேண்டியதுதான் எண்ட எண்ணம்தான் இப்ப வலுக்குது."

"ஒருவேளை இன்னும் சில வருடங்களின் பின் ஏதாவது ரயில் நிலையத்திலோ, இல்லை பஸ்ராண்டிலோ இடுப்பில் ஓர் குழந்தையுடன் கறுப்பாய், குண்டாய் விகாரமான பற்களுடன் உள்ள ஒருத்தியைக் காட்டி 'இவள் தான் என் மனைவி' என்று நீ எனக்கு அறிமுகப்படுத்தினாலும் அறிமுகப்படுத்தலாம்" என்றான் விஜயன்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் — சில நினைவுகள்



தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தலைசிறந்த தலைவர்களில் ஒருவர். இவர் முதலாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து நிலவிய பெருமந்த நிலையில், உலகம் நலிந்த காலத்தில் 05-03 1931 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டியில் நிலவுடமை மதிப்பீடுகளோடு தொடர்புடைய ஒரு வைதீக விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அக்காலத்தில் காங்கேசன்துறையில், குறிப்பாகக் கொல்லங்கட்டிப் பகுதியில் நிலவுடமையின் ஆதிக்கம் அதிகம் காணப்பட்டது

தனது ஆரம்பக் கல்வியை கொல்லங்கட்டியிலுள்ள கிராமப் பாடசாலையில் முடித்துக் கொண்ட சுப்பிரமணியம், கொழும்பு புனித தோமஸ் கல்லூரி, இளவாலை புனித ஹென்றீஸ் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிகளில் தனது படிப்பைத் தொடர்ந்தார்.

இந்தக் காலப்பகுதியில் — 1930 களின் பிறகு, சுப்பிரமணியம் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில், 1917 ஒக்ரோபர் ரஷ்யப் புரட்சிக்கும் பிறகு அடித்த அரசியல் அலைகளாலும், இந்தியாவில் நடந்த சுதந்திரப் போராட்டத்தினாலும், பகவத் சிங் போன்ற சுதந்திர வீரர்களினது தியாக சம்பவங்களினாலும் பெரிதும் கவரப்பட்டார். தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் மரபு வழிப்பட்ட நிலவுடமையாளர் முன் நிறுத்திய சாதியமைப்பு, பிராமணரின் கருத்தியம், பொருளியல் ஆதிக்கம் ஆகியவற்றிற்கெதிரான ஈ. வே. இராமசாமிப் பெரியாரின் பிரசாரத்தினாலும் ஈர்க்கப்பட்டார். இந் நிகழ்வுகள், மணியத்தின் மனதில் இளம் பராயத்தில் வர்க்க சமூக நியமங்களைப் பற்றிய ஒரு கருத்தோட்டத்தை ஏற்படுத்தியதோடு, அவரின் எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கான அடித்தளமாகவும் அமைந்தது.

ஈ. ஆர். திருச்செல்வம்

1948 இல் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையின் முதற் கட்ட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மணியம் அவர்களும் பொறியியல் துறையில் பயிலுனராகச் சேர்ந்து, மூன்று ஆண்டுகள் அங்கு வேலை செய்தார்.

இந்தப் பகைப்புலத்தில் மணியத்துக்கு யாழ்ப்பாணத்தில் குருநகரிலிருந்து தொழிற்சாலைக்கு வேலைக்குவந்த சந்தியாப்பிள்ளை என்ற கொம்யூனிஸ்ட் தொழிலாளியின் உறவு ஏற்பட்டது. இந்த ஊடாட்டத்தினால், மார்க்ஸீய மெய்ஞ்ஞானத்தைக் கற்கத் தொடங்கினார்.

இந்நிலையில் 1951 இல், மணியம் தனது சகபாடியான தொழிலாளி ஒருவருக்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில், வேலை நீக்கம் செய்யப்பட்ட மணியும் அதே ஆண்டில் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து அதன் முழுநேர ஊழியரானார். வடபிரதேசத்தில் சக்திமிக்க கொம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கத்தைக் கட்டி வளர்த்த பெருமை, மணியத்தையே சாரும்.

1963 - 64 இல் இடம்பெற்ற மார்க்ஸீய — லெனினிச தத்துவப் பூசலில். இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி இரண்டு கூறாகியது. அச் சமயம் மணியம் புரட்சிகரக் கொள்கைகளை உடைய பிரிவுடன் சேர்ந்து கொண்டார் இப் பிரிவு 'சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி' என்று அழைக்கப்பட்டது. இக் கட்சியில் அங்கம் வகித்த மணியம் பல்வேறு விதமான போராட்டங்களில் பங்கு கொண்டார்.

கிராம மக்களின் அவலங்களைக் களைவதற்கும், சாதி அடக்கு முறைக்கு எதிராக, அவற்றையெதிர்க்கத் துணிந்த மக்களுக்குத் தலைமை தாங்கி 1966 ஒக்ரோபர் 21 இல் போராட்டத்தை ஆரம்பித்தார். 1966 - 70 வரையிலான போராட்டத்திற்குச் சாதக, பாதக மதிப்பீடுகள் இருந்தபோதிலும், சமூக அநீதிக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான இப்போராட்டம் காலப்போக்கில், ஒரு சமூக மாற்றத்துக்குப் பயன்படும் வகையில் பரிணமித்தது. இப் போராட்டங்களில் மணியம் தாக்குதல்களுக்கு ஆளாகிப் பலமுறை பாரிய காயங்கள் பட்டார் இக் காலகட்டங்களில் தாக்குதல்கள், கொலை முயற்சிகள், தேடுதல், சுற்றிவளைப்பு, தடுப்புக்காவல், ஆகியவற்றை மனவுறுதியுடன் எதிர்கொண்டார்.

1978 இல் பழைய கொம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தன்னைவிடுவித்துக்கொண்ட மணியம், தன்னுடைய ஆதரவாளர்களோடும், ஏனைய கட்சி உறுப்பினர்களோடும் சேர்ந்து இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி (இடது) இனை உருவாக்கி, அதன் பொதுச்செயலாளராகவும் செயற்பட்டு வந்தார். இவர்கட்சியை ஒரு 'நலன்புரிச் சங்க'மாகவோ, அல்லது தொழிற் சங்கத்தை ஒரு லாபமரமான பிழைப்பாகவோ கருதவில்லை. 27-11-89 இல் கண்டியில் மணியம் இறக்கும்போதும், அதன் பொதுச் செயலாளராகவே செயற்பட்டு வந்தார்.

தோழர் கே ஏ. சுப்பிரமணியத்தைக் இக் கட்டுரையாளர் நீண்டகாலமாக அறிவார். ஆனால், அவருடன் கருத்தியில் அடிப்படையில் வேறுபாடுகள் உண்டு. ஆனால், தன்னுடன் உடன்பாடில்லாதவர்களுடனும் அன்புடன் பழகக்கூடிய மனிதர் மணியர்.

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் ஒரு லட்சியத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்தவர்; அந்த லட்சியத்துக்கு கடைசி வரை உண்மையாக நடந்து கொண்டவரென்பதை நண்பர்கள் அறிவார்கள்; அவரை அறிந்தவர்களும் அறிவார்கள். ☐

## தொழிலாளர் பிழைப்பில் மண்

கன்னுதிட்டியில் நகைக்கடை ஒன்றில் இனந்தெரியாத கோஷ்டியினர் பாரிய கொள்ளை ஒன்றை சமீபத்தில் நடத்தியுள்ளனர். நகைத் தொழில் வேலை அடர்த்தியாகக் காணப்படும் இப் பகுதியில் பெரும்பாலும் மட்டக்களப்பு நகைத் தொழிலாளர்களே வேலை செய்கின்றனர். இத் தொழிலாளர்கள் நகைக் கடைகளுடன் ஒரு ஒப்பந்த அடிப்படையில் பொருந்தியே வேலை செய்கின்றனர். இவர்கள் மட்டக்களப்பிலிருந்து ஒரு தொகை பணத்தை கடனாகவோ, பொருள் பண்டங்களை ஈடு வைத்தோ கொண்டு வருகிறார்கள். இதை முதலாளிமாரிடம் 'நம்பிக்கை வைப்பாக'க் கொடுத்து, அதற்கு எதிராக குறிப்பிட்ட அளவு பவுணைப் பெற்று, நகைகளைச் செய்து திரும்பவும் கடைகளுக்குக் கொடுக்கிறார்கள். தொழிலால் வரும் லாபத்தையும் வருமானத்தையும் கொண்டு தமது கடனைக் காலப்போக்கில் தீர்க்கிறார்கள். கன்னுதிட்டி நகைக் கடைகளில் அடிக்கடி கொள்ளைக் கோஷ்டிகள் கைவரிசை காட்டுவதனால், ஏழைகளான மட்டக்களப்புத் தொழிலாளரின் பணமும் அடிபட்டும் போவதோடு, தொழிலாளரின் வேலையும்பாதிக்கப்பட்டு அவர்கள் அவலப்படவேண்டி இருக்கிறது என்பது சந்திக்கு வராத விஷயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவு திகதி நீடிப்பு

திசை — அறிவுப் போட்டி இலக் — 1 இன் முடிவு திகதியினை 22-12-89 வரை நீடித்துள்ளோம்.

போட்டி விண்ணப்பப் படிவத்தில், போட்டியாளர் படிக்கும் பாடசாலையில் கற்பிக்கும் எந்தவொரு ஆசிரியரும் ஒப்பமிடலாம் என்பதையும், தெரிவிக்கிறோம்.

—ஆர். —

## நினைவு தினமும் இரத்ததானமும்

யாழ் மரியன்னை பேராலயத்தில் இயங்கி வரும் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தைச் சேர்ந்த யோசப் மேவினும், சந்திரகுமாரும் 1987 — 88ல் நடந்த அனர்த்தங்களின்போது அகால மரணமானார்கள். அவர்களது நினைவு தினம் மேற்படி பேராலயத்தில் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. திருப்பலியின் போது அவர்களுக்காக விசேட பிரார்த்தனையும் ஒழுங்கு செய்யப்பட்டது. தொடர்ந்து ஞானப்பிரகாசியார் மண்டபத்தில் ஒரு இரங்கல் கூட்டமும் நடைபெற்றது. இ. உ இயக்க உறுப்பினர் இத் தினத்தில் இரத்ததானமும் வழங்கினர்.

## பிழை திருத்தம்

சென்றவாரத் 'திசை' இணைதல் பகுதித் தலைப்பாக 'கைலாசபதி கருத்தரங்கில் கூச்சல்' என்றிருப்பதை 'கைலாசபதி கலையரங்கில் கூச்சல்' எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

— ஆர் —

## அர்த்தத்தைத்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அந்த என் மனைவி என் அழகுணர்வுகளை எல்லாம் அடித்து நொருக்கி; என் தன்முனைப்புகளை எல்லாம் விழுங்கிச் சாப்பிட்டு – கன காலத்திற்குப் பிறகு சந்திக்கிற உன்னோடை கரைபுரள்கிற சந்தோசத்திலை கைகளை இறுகப் பற்றியவாறு கதைச்சுக் கொண்டிருக்கேக்கை 'இஞ்சாருங்கோ, இஞ்சை வந்து இந்தப் பிள்ளையைப் பிடியுங்கோ, போறவாற இடமெல்லாம் என்ன கண்டறியாத கதை' என்று உன்காதுபடவே என்னைப் பேசி, உன்னையும் என்னையும் அவமானப்படுத்தலாம்."

மீண்டும் இருவரும் உரக்கச் சிரித்து பள்ளக்கடை முதலாளியை மீண்டுமொருமுறை சிரிக்க வைத்தார்கள்.

நம்பிக்கையற்ற; எமதுகையில் இல்லாத நாளையப்பொழுதில் இவை சாத்தியமாதலும் கூடும்.

வெளியே இருள் கவிந்து வந்தது. கோப்பித் தோட்டத்திற்கூடாக இளம் பொன்னிறத்தில் நிலவு புறப்பட்டது. அந்தப் பூரண சந்திரனை ஒரு சிறு மேகக் காற்று மறைத்திருந்த விதம்கூட ஓர் அழகிய கவிதைபோல் இருந்தது.

மெல்லிய தோகையாக பனி கவிந்து வந்தது.

கோப்பி மரமெல்லாம் 'கொல்' எனப் பூத்திருந்தது.

தூரத்தில் கரந்த கொல்ல பஸ் இரைந்து சென்றது.

(f) பாம் வோச்சர் தண்டவாளத்தில் 7 முறை அடிக்கும் சத்தம் கேட்டது.

"மை கோட்; 7 மணியாய்ப் போச்சு; 4 மணிதொடக்கம் இஞ்சை இருந்திட்டம் எழும்பு! எழும்பு! சாப்பாட்டுக்கு நேரமாய்ப் போச்சு"

"பண்டையா என்ன கறி போட்டிருக்கிறாரோ தெரியாது"

"என்ன வழக்கம் போலை முத்தல் பீன்சும் பூசணிக்காயும் தான்; வேறை என்ன இருக்கும்.

அவர்கள் இருவரும் அந்த இடத்தை விட்டுப் பிரிய மனமின்றி எழுந்தார்கள்!

பள்ளக்கடை முதலாளிக்கு 'போமஸ்துதி' சொன்னார்கள்!

"நீ இண்டைக்கு என்னோடை அபயவர்த்தனவில் தங்கிப் போவன் விஜி" — உண்மையான ஆதங்கத்துடன் கேட்டான் ராஜன்.

"ஏன் தனியப் போகப் பயமாய் இருக்கே"

"பயமெண்டில்லை கொஸ்ரலிலை நான் ஒரு அன்னியத் தன்மையை உணர்கிறன்"

"பண்பாடற்ற மனிதர்கள் எல்லா இடத்திலும்; எல்லாத் தரத்திலும் இருக்கிறார்கள்"

இருவரும் கடைக்கு வெளியே வந்தார்கள்! பாலாகப் பொழிகின்ற நிலவின் அமுததாரையிலும்; பனித்திரையிலும் நனைந்து திளைத்தார்கள்.

"நிலவு குளிர்ச்சியாக இல்லை ......" — முணுமுணுத்தான் விஜயன்.

"சைக் ...... சும்மாயிரு. எவ்வளவு சந்தோசமாய் இருக்கு இப்படி நிலவிலை நடந்து போக"

தெபீபியா ரோசாவும்; என் புருக்கியும்; வாகையும்; ஊதாவாயும், சிவப்பாயும், பொன்னிறமாயும் வழியெல்லாம் பூச் சொரிந்திருக்கும் அந்த அழகிய தெருவில் அவர்கள் மகிழ்ச்சியுடன் நடந்தார்கள்

"ஏரிக்கரைப் பூங்காற்றே ... ..." தன்னையறியாமல் உற்சாகம் கொண்டு ராஜன் பாடத் தொடங்கினான்.

ராஜனின் திடீர் சந்தோசத்தால் திகைப்படைந்த விஜயன்,

"வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தைக்கண்டு; இப்படித் திடீர் சந்தோசம் கொண்டு கான மழை பொழிகிறாய்" என நாடக பாணியில் கேட்டான்.

"நீண்ட வாழ்க்கைக்கு அர்த்தமிருக்கோ என்னவோ தெரியாது; ஆனால் இந்த நிமிடத்துளிகட்கு அர்த்தமிருக்கு மச்சான். நாங்கள் போடுற முகமூடிகளை எல்லாம் கழட்டி வைச்சிட்டு வளைஞ்சு கொடுக்காத எங்கடை தன்முனைப்புகளை எல்லாம் எடுத்து வைச்சிட்டு இப்படி மனம்விட்டு பரிநிர்வாணமாய் கதைக்கிற கணங்கள் இப்படி சந்தோசமாய் நிலவிலை நலக்கிற கணங்கள் — இந்தக் கணப்பொழுதுகட்கு அர்த்தம் இருக்கு மச்சான்.

இந்தக் கணப்பொழுதுகள் தான் வாழ்க்கையையே அர்த்தமாக்குது மச்சான் — ராஜன் மகிழ்ச்சி கொப்பளிக்கச் சொன்னான்,

"சாலையோரம் சோலையொன்று பாடும் .. " விஜயன் பாடத் தொடங்கினான்.

அவர்கள் பாட்டும் சிரிப்புமாக விடுதியை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். ☐

திசை
THISAI

# இந்தியாவோடு நல்லுறவைப் பேணுவது சாத்தியமா?

இந்தியாவோடு இலங்கை மீண்டும் நல்லுறவைப் பேணுவதற்கு இது தக்க தருணமா என ஈ. எல். ஜே. பி. தலைவரான றுக்மன் சேனநாயக்கவிடம் பத்திரிகையாளர் கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதில் அளித்துள்ளார்.

ராஜீவின் கொங்கிரஸ் கட்சி, தென்னிந்திய சிறுபான்மையின் ஆதரவோடு இன்று பதவிக்கு வந்திருக்குமானல் இலங்கையின் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும். காரணம், ஏற்கனவே இலங்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் ராஜீவ் அரசு கடைப்பிடித்த யதேச்சாதிகாரப்போக்கு இன்னும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கும். ஆனுல் தற்போது நிலைமை வேறு. மாறிய புதிய ஆட்சியாளருடன் நல்லுறவைப் பேணுவதே உகந்தது.

ஆனுல் அதே கேள்வி வாசுதேவ நாணயக்காராவிடம் கேட்கப்பட்டபோது. அவர் கூறியதாவது:

முன்னைய ராஜீவ் அரசுடன் நல்லுறவைப் பேணுவது இலகுவானதும் பொருத்தமானதும் ஆகும். ஆனுல் தற்போது ஆட்சிக்கு வந்துள்ள அரசு பலவீனமானது. அத்தோடு அதனேடு நல்லுறவைப் பேணுவதற்கு முந்திய அரசாங்கத்தின் எச்சமாக இருக்கும் அதிகாரி வர்க்க அமைப்பு பெருந்தடையாகவும் இருக்கும்.

## திசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

### அமைதிக்குரிய பரிகாரம்

இன்று மீண்டும் தென்னிலங்கையில் இரத்தக்களரியும் தீவைப்பும் ஏனைய நாசவேலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஜே.வி.பி. தலைவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் நடந்ததைவிட, இவை இரட்டிப்பாகவும், இன்னும் உக்கிரத்தோடும் இடம் பெறுகின்றன என்றே தெரிய வருகிறது.

ஜே.வி.பி. தலைவர்கள் மறைந்ததோடு நாட்டுக்கு அமைதி வந்து விட்டதாகவும் நாசவேலைகள் மேலும் நாட்டில் இடம் பெறமாட்டாதென்ற வகையிலும் பரலலாகப் பேசப்பட்டது. ஆனுல் இன்று மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள நாசவேலைகள் இந்த ஆருடங்களைப் பொய்யாக்குவன போலவே உள்ளன.

இதற்குரிய காரணம் என்ன?

தலைவர்கள் அழிக்கப்பட்டு விட்டால் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட அமைப்பும் அழிந்துவிடும் என்று எதிர்பார்ப்பது அறிவீனமாகும். ஆனுல் ஜே.வி.பி யைப் பொறுத்தவரை தலைமையின் அழிவோடு அதன் அமைப்பும் குலைந்துவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. அதற்குக் காரணம், வெறும் "ஆமாம்" போடுபவர்களையே ஜே.வி.பி உறுப்பினர்களாகக் கொண்டிருந்ததென்றும், அதனுல் தலைவர்களின் அழிவுக்குப் பின் அதை ஒழுங்குற நடத்துவதற்குத் தேவையானவர்கள் அதற்குள் இல்லையென்றும் அனுமானிக்கப்பட்டது.

இன்று, மீண்டும் ஜே வி.பி. காட்டி வரும் உத்வேகம் இதைப் பிழையானதாகவே காட்டுகிறது. தலைவர்கள் அழிவே அவர்களால் அடக்கி வைக்கப்பட்டிருந்த, இனந்தெரியாத திறமைசாலிகள் இன்று தலைமை தாங்கும் வாய்ப்பையும் அளித்திருக்கலாம்.

ஆனுல் இன்னென்றும் அதற்கெதிராகக் கூறலாம்.

இப்பொழுது ஜே.வி.பி யால் நடத்தப்பட்டு வருபவை வெறும் அழிப்பு வேலைகளே. இந்த அழிப்பு வேலைகளுக்கு விசேடமான அறிவுமிக்க தலைமை வேண்டும் என்றும் இல்லை. முன்னரே காட்டித்தந்த நாசவேலைத் தடத்தில் ஓடுவது என்பது பெரிய சிரமமான காரியமில்லை. அதற்குப் பெரிய தலைமை தேவையென்றும் இலலை.

எனினும் இதன் மூலம் ஒன்றை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

ஜே.வி.பி. என்பது அதன் கொள்கைகள் எவ்வாறு இருந்த போதும் — ஓர் இயக்கமாக, ஒரு கருத்தை முன் வைத்து, அதன் போதனை அடிப்படையில் இளைஞர்களை ஒன்றிணைத்து இயங்கிய வரலாறு கொண்ட இயக்கமாகும் ஆகவே அதனை அழிப்பது என்பது கடினம். எதுவித இலட்சியமோ கருத்தோ அற்ற வெற்று மனிதச் சாகஸங்களைக் கொண்ட அமைப்புகளை அழிப்பதே சுலபம். ஆனுல் சிலவற்றையல்ல.

ஆகவே இத்தகைய கருத்து இலட்சிய ரூப அமைப்புகளை அடக்குவதோ, வென்றெடுப்பதோ என்பது அவை அவாவி நிற்கும் லட்சியங்களின் அடிவரை சென்று ஆய்ந்து அவைக்கு பரிகாரம் காண்பதிலேயே உள்ளது.

ஈழத்தமிழர்களின் விடுதலை எழுச்சி இவ்வளவுக்கு மேலோங்கியதற்குக் காரணம் ஈழத்தமிழர் கோரிக்கையில் உள்ள கருத்து வலுவே என்பது தெளிவு. □

## மதிய உணவு விநியோகம்

— இந்து இளைஞர் பேரவை மகஜர்

"யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் உணவு விநியோகம், பணம் கிடைக்கவில்லையெனக் கூறி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனுல் மதிய உணவு பெற்ற மாணவர்கள் மத்தியில் மனவிரக்தியை உணரக் கூடியதாக இருக்கிறது."

இவ்வாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஜனதிபதிக்கு அனுப்பிய மகஜரில் குறிப்பிட்டுளளது.

இது தொடர்பாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான உணவு விநியோக அறிக்கையைப் பெற்று, உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அவ்வறிக்கையில் ஜனதிபதியைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கண்டிருப்பதாவது: "ஆரம்பத் திகதியில் உணவு வழங்க மறுத்த பாடசாலைகள், பின்னர் அவை உணவு வழங்கத் தொடங்கிய திகதி, உணவு விநியோகம் நிறுத்தப்பட்ட திகதி, என்பன மாணவர், பெற்ரேர்களது உதவியுடன் உறுதி செய்யப்பட்டு, உணவுவிநியோகத்தில் தவறிழைத்த பாடசாலை அதிபர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்."

## இடமாற்றம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சேவை செய்யும் உதவியாணையாளர்கள் (உதவி அரசாங்க அதிபர்), கிராம சேவகர்கள் ஆகியோரின் இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகளை இனிமேல் மாகாண அரசின் பொதுச் சேவை ஆணைக்குழு மேற்கொள்ளுமென, மாகாண அரசின் பிரதம செயலாளர் வே. த. சிவராசா அறிவித்துள்ளார்.

## நவசமசமாஜக் கட்சியின் வருடாந்த விழா

டிசெம்பர் 30ஆம் திகதியன்று நவசமசமாஜக் கட்சியின் 12 ஆவது வருடாந்த விழா நடைபெறவுள்ளது. வருடாந்த விழாவை முன்னிட்டு தமிழ் - சிங்கள கட்டுரைப் போட்டி ஒன்றும் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்காக: வளரும் நாடுகளின் கடன்களை ரத்துச் செய்க

— யூனிசெவ்

வளரும் நாடுகளில் உள்ள சிறுவர்களில் பெருந்தொகையானேர் - 10 கோடி பேருக்கு மேல் பல்வேறு நோய்கள், பட்டினி இவற்றுல் இறக்க நேரிடும் என்று, சர்வதேச யூனிசேவ் நிறுவனம் குழந்தைகள் பற்றிய தனது ஆண்டுக் கணிப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

8 மில்லியன் குழந்தைகள், சின்னம்மை முதலான தொற்று நோய்களாலும், 7 மில்லியன் குழந்தைகள் உடலில் நீர்த்தன்மை அற்றுப் போவதாலும், 6 மில்லியன் குழந்தைகள் சளி நோய்களாலும், ஏனையவை போஷாக்கின்மையாலும் இறக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

இவர்களுக்கான தொற்று நோய்த் தடுப்பு முறைகள், சுகாதார வசதிகளைப் பேணுதல், போஷாக்கு உணவளித்தல் திட்டங்களை வளரும் நாடுகளிடையே ஒருங்கிணைந்த முறையில் உருவாக்க வேண்டியுள்ளது. ஆனுல் வளரும் நாடுகளோ அபிவிருத்தி நாடுகளின் கடன் சுமையில் வட்டிகளில் தான் தமது பணத்தை வாரி இறைக்கின்றன. இந்தக் கடன்களை ரத்து செய்வதோடு சகல நாடுகளும் தமது பாதுகாப்புச் செலவினங்களையும் குறைத்து, வரும் நிதியில் மூலதனமிட்டு வளரும் நாடுகளின் குழந்தைகளுக்கு உதவும் திட்டத்தை உருவாக்கி அவர்களை சாவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென யூனிசெவ் கேட்டுள்ளது.

## அஞ்சலிக் கூட்டம்

இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கான அஞ்சலிக் கூட்டம் எதிாவரும் ஞாயிறு பி.ப. 2 மணியளவில் மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சி.கா. செந்திவேல் அவர்கள் தலையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் திரு.ஏ. ஜே. கனகரட்ணு, திரு. எம். கோபாலரட்ணம் உட்படப் பலர் உரையாற்றுவார்கள்.

## உப்சாலா — யாழ். பல்கலைக்கழக இணைப்பு செயற்திட்டம்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி எஸ். பத்மநாதன், சுவீடன் நாட்டிலுள்ள "வாழ்வுக்கும் சமாதானத்திற்குமான நிறுவனத்தினுல்" ஒழுங்கு செய்யப்பட்ட மகாநாட்டில் சென்ற மாதம் கலந்து கொண்டார். மகாநாட்டில் பேராசிரியர், "இலங்கையில் ஜனநாயக ஆட்சியின் சீர்கேடுகள்-அரசியலில் மதத்தின் செல்வாக்கு" என்ற பொருள் பற்றிய கட்டுரையை வாசித்தார். மகாநாட்டின் முடிவில் சுவீடன் நாட்டிலுள்ள உப்சாலா பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறைபீடம் பேராசிரியரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கௌரவித்தது. மேலும், பேராசிரியரின் முயற்சியால் உப்சாலா - யாழ் பல்கலைக்கழகங்களுக்கிடையில் கலைப்பீடங்களுக்கிடையிலான இணைப்பு செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனுல் இவ்விரு பல்கலைக் கழகங்களுக்கிடையில் ஆசிரியர்-மாணவர் பரிமாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

## கொம்பியூட்டர் கல்வி

**DIPLOMA IN BASIC PROGRAMMING AND DP**

ஆரம்பம்:- 23—12—89

**dBASE III+, dBASE IV**

ஆரம்பம் 16—12—89 1-30 p. m.

**LOTUS 1 2 3, WORD PROCESSING**

ஆரம்பம் 18. 12. 89

O/L படித்த இருபாலாரும் சேரலாம்
கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்

மேலதிக விபரங்களுக்கு:-

**Unikco Computer Centre**

2nd Lane,
No. 5, Power House Road,
Jaffna.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 15-12-1989இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.